வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 11.06.2022 சனிக்கிழமை | இதழ் : 193 | பக்கங்கள் : 16

### சவாரி தர்க்கம் வாள்வெட்டில் முடிந்தது!

# சகோதரர் இருவர் கொலை; மூவர் காயங்களுக்கு இலக்கு

### மன்னாரில் நேற்று துயரம்

*மன்னார், ஜூன் 11*

மாட்டு வண்டிச் சவாரியில் ஏற்பட்ட தர்க்கம் வாள்வெட்டில் முடிந்ததில் சகோதரர்கள் இருவர் வெட்டிக் கொல்லப்பட்டனர். மூன்று பேர் படுகாயங்களுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூர சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் நொச்சிக் குளத்தில் இடம்பெற்றுள்ளது. இதில், உயிலங்குளத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் றோமியோ (வயது 40), ஜேசுதாசன் தேவதாஸ் (வயது 30) ஆகியோரே கொல்லப்பட்டனர் என்று அறிய வருகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து

15

# எம். பியானார் தம்மிக பெரேரா

### வெளியானது வர்த்தமானி

*கொழும்பு, ஜூன் 11*

நாட்டின் பிரபல வர்த்தகரான தம்மிக பெரேரா தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலிலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசியப் பட்டியல் எம். பியான பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் தனது பதவியை இராஜிநாமா

15

# இலங்கையில் விரைவில் மனிதாபிமான நெருக்கடி

### ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை



*நியூயோர்க், ஜூன் 11*

இலங்கை எதிர்கொண்டுள்ள முன்னொரு போதும் இல்லாத பொருளாதார நெருக்கடி மிக மோசமான மனிதாபிமான நெருக்கடியாக மாறாலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

15

# குருந்தூர்மலையில் நாளை புத்தர் சிலை பிரதிஷ்டை!

*முல்லைத்தீவு, ஜூன் 11*



இந்து தமிழரின் பூர்வீக பகுதியான குருந்தூர்மலையில் இராணுவத்தினரின் ஆதரவுடன் அமைக்கப்பட்டுவரும் விகாரையில் கபோக் கல்லால் செதுக்கப்பட்ட புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது என்று அறிய வருகின்றது. இதற்கான ஏற்பாடுகள் இரவு - பகலாக முன்னெடுக்கப்படுகின்றன.

15



# போராட்டக்காரர்களின் கைகளில் இரத்த கறை!

### மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

*கொழும்பு, ஜூன் 11*

காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்ட மதத் தலைவர்கள் கூட வன்முறைகளை தடுக்கத் தவறிவிட்டனர். இதனாலேயே 'அறகலய' (போராட்டம்) படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது. போராட்டக்காரர்களின் கைகளில் இரத்தம் இருக்கிறது என்று முன்னாள் பிரதமர்

15

# இலங்கைக்கான கடன் குறித்து தீர்மானம் எதுவும் எட்டவில்லை

### சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

*கொழும்பு, ஜூன். 11*

இலங்கை முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வழங்கப்படும் கடன் மற்றும் காலம் தொடர்பில் இதுவரை எந்தவித தீர்மானமும் எட்டப்படவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஜெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் முறையில் இடம்பெற்ற நேர்காணலின்போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

இதற்காக எதிர்வரும் வாரங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், இலங்கை முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி நிலை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் அவதானத்துடன் செயற்படுவதாகவும் ஜெரி ரைஸ் குறிப்பிட்டார். (அ)

# திங்களன்று விசேட பொது விடுமுறை!

*கொழும்பு, ஜூன். 11*

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கள்கிழமை விசேட பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் இந்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்

15

# முதலீட்டு, ஊக்குவிப்பு பெண்கள் விவகாரம்

### இரண்டு அமைச்சுக்கள் ஸ்தாபிப்பு

*கொழும்பு, ஜூன் 11*

நாட்டில் புதிதாக இரு அமைச்சுக்கள் நிறுவப்பட்டுள்ளன. இதனை விசேட வர்த்தமானி மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இதன்படி, பெண்கள், குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சு, தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு என்பன நிறுவப்பட்டுள்ளன.

15

# யாழ். இந்துக் கல்லூரி 230/10; விரட்டுகிறது கொழும்பு இந்து!

*யாழ்ப்பாணம், ஜூன் 11*

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி தனது முதல் இனிங்ஸில் 230 ஓட்டங்களை குவித்துள்ளது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் கொழும்பு இந்துக் கல்லூரி 81 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்த நிலையில் துடுப்பெடுத்தாடி வருகிறது.

இந்துக்களின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொழும்பு இந்துக் கல்லூரி அணிகளின் 11ஆவது பெருந் துடுப்

15

# தொழில்நுட்பம், முதலீட்டு அமைச்சு தம்மிக்கவுக்கு!

*கொழும்பு, ஜூன். 11*

ஜனாதிபதியினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இரண்டு அமைச்சுக்களில் ஒன்று வர்த்தகர் தம்மிக்க பெரேராவிடம் கையளிக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு, மகளிர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கள் என்பன ஜனாதிபதியினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன், இதில்

15

## இப்படியும் நடக்கிறது...!

இலங்கையின் 'அம்பானி' என்று வர்ணிக்கப்படுபவர் தம்மிக்க பெரேரா என்ற கோடீஸ்வரர்.

அவர், பல நிதி நிறுவனங்கள் உட்பட, இருபதுக்கும் மேற்பட்ட துறைகளில் வர்த்தகம் செய்பவர். என்னதான் உழைத்து குவித்திருந்தாலும், தம்மிக்க என்றதும் ஞாபகத்திற்கு வருவது, அவரை இந்த நிலைக்கு உயர்த்திய அவரது கசினோ சாம்ராஜ்யம்தான்.

இன்றும் இருபத்துநான்கு மணிநேரமும் இயங்கிக்கொண்டிருக்கும் கசினோ நிலையங்கள் அவருக்குச் சொந்தமானவை.

நீண்டகாலமாகவே அரசியலில் கால்பதிக்க பல்வேறு காய்நகர்த்தல்களில் ஈடுபட்டிருப்பவர்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில், அவரது புதல்வர்கள் தொடர்பாக அவ்வப்போது ஊகங்கள் வெளிவருவதுண்டு.

கொழும்பில் அந்தக் கட்டிடத்தை நாமல் வாங்கினார், இந்தக் கட்டிடத்தை யோசித வாங்கினார் என்று வதந்திகள் வெளிவருவதுண்டு. ஆனால், அவை பின்னர் தம்மிக்கவின் சொத்துக்களாக இருக்கும்.

அதாவது, இவர் பெயரிலேயே அவர்கள் சொத்துக்களை வாங்கிக் குவிப்பதாக கூறப்படுவதுண்டு.

இவையெல்லாம் ஊகங்கள் மாத்திரமே. ஒருவர் பினாமி பெயரில் சொத்துக்களை வாங்கினால், எப்போதுமே அதனை அவருடையது தான் என்று நிரூபிக்க முடியாது. அவை வதந்திகளாகவும் ஊகங்களாகவுமே கடந்துபோய்விடுவதுண்டு.

இன்று ஜனாதிபதி கோட்டாபய தோற்றுப்போன ஜனாதிபதி என்பதை தானே ஒப்புக்கொண்டபோதிலும், எஞ்சியிருக்கும் காலத்தில் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டு, வெற்றிகரமான ஜனாதிபதியாகவே தான் பதவியிலிருந்து செல்லவிரும்புவதாகவும், அடுத்த தடவை போட்டியிடப்போவதில்லை என்றும் அறிவித்துவிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய இப்போது எப்படி தோற்றுப்போன ஒருவராக இருக்கின்றாரோ அதேபோல, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தோற்றுப்போன ஜனாதிபதியாக இருந்த போது, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு பலரும் முண்டியடித்தனர்.

அப்போது, ஜனாதிபதி தேர்தல் களத்தில் குதிக்கும் தனது விருப்பத்தை பகிரங்கமாக வெளியிட்ட தம்மிக்க பெரேரா, அதற்காக சில பிரச்சாரங்களையும் ஆரம்பித்திருந்தார்.

அப்போது, மஹிந்த தரப்பில் அடுத்த வேட்பாளராக யாரை களம் இறக்குவது என்பதில் தீர்மானம் எடுக்கப்படாத காலம் அது. மஹிந்தவின் நெருக்கமானவர் என்று கூறப்பட்ட தம்மிக்க பெரேரா, தான் பொதுவேட்பாளராக ரணில் தரப்பிலிருந்து போட்டியிட விருப்பம் தெரிவித்திருந்ததும், அதனை ரணில் நிராகரித்திருந்ததும் செய்திகளாகவும் வந்திருந்தன.

அப்போது ரணில் அவரை நிராகரிக்க பிரதான காரணமாக இருந்தது, அவர் செய்துவரும் வர்த்தகமே. கசினோகாரரை நாட்டின் தலைவராக பௌத்த மதத்தினர் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று தம்மிக்க தொடர்பான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இப்போதும், பசில் ராஜபக்ஷ தனது தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யப்போவதாக செய்திகள் வரத்தொடங்கியதுமே, அவரது இடத்திற்கு தம்மிக்க பெரேரா நியமிக்கப்படலாம் என்ற செய்திகளும் கூடவே வெளிவரத் தொடங்கியிருந்தன.

தம்மிக்க பாராளுமன்றத்திற்குள் வருவதெனில் அவருக்கு நிச்சயம் ஓர் அமைச்சர் பதவி வழங்கப்படும் என்பதும் தெரிந்ததுதான். அதனால்தான், பசில் பதவி விலகிய அன்றே புதிதாக இரண்டு அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டு, அதற்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. அதில் ஓர் அமைச்சு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு என்றதுமே, இது தம்மிக்கவுக்காகவே உருவாக்கப்படுகின்றது என்பதும் தெரிந்ததுதான்.

இந்த அமைச்சு, நிதியுடன் சம்பந்தப்பட்ட அமைச்சு. அதனை ஒரு வர்த்தகரிடம் கொடுப்பது தார்மீக ரீதியில் தவறானது என்பதும் தெரிந்ததே.

அதனால்தானோ என்னவோ, பஸிலின் இடத்திற்கு தம்மிக்க நியமிக்கப்படவிருப்பதாக செய்தி வெளிவந்ததுமே அதனை ரணில் விரும்பவில்லை என்றும், ஜனாதிபதியைச் சந்தித்து தனது அதிருப்தியை தெரிவித்ததாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன. ஆனால், அதனை ஜனாதிபதி கருத்தில் கொள்ளவில்லை என்றும், அதேவேளை, நீங்கள் விரும்பினால் பதவியில் இருக்கலாம் என்ற அளவிற்கு ரணிலுக்கு பதிலளித்ததாகவும்கூட ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி பதவியில் குறியாக இருந்த தம்மிக்க பெரேரா, இப்போது பாராளுமன்றத்தினூடாக அரசியலுக்கு வந்து அமைச்சராகினாலும் அவரது குறி என்னவாக இருக்கும் என்பதும் தெரிந்ததுதான்.

ஜனாதிபதி பதவிக்கான பிரச்சாரத்தை அவர் முன்னர் நடத்திய போது, தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் இனப்பிரச்னை பற்றிய கேள்விக்கு பதிலளித்தது இப்போதும் ஞாபகத்தில் இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி தெரிந்த பொலிசார் நியமிக்கப்பட்டால் அந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று பதிலளித்திருந்தார் அவர்.

யுத்தத்தில் வெற்றிபெற்ற ஒருவர் அதனை வழிநடத்தியதுபோல நாட்டையும் வழிநடத்துவார் என்று கோட்டாவை கொண்டுவந்ததைப்போல, வர்த்தகத்தில் வெற்றிபெற்ற ஒருவரிடம் நாட்டை கொடுத்தால் இது மற்றுமோர் அனுபவமாகவும் முடியலாம். பொறுத்திருந்து, என்னதான் நடக்கின்றது என்று பார்ப்போம்!

**- ஊர்க்குருவி**

# யாழில் சமுர்த்தி பயனாளிகளை உடனே மீளாய்வு செய்யுங்கள்!

## யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஜூன் 11*

யாழ். மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகள் பட்டியலை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி அதிக வறுமைக்கோட்டுக்குள், காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள குடும்பங்களை சமுர்த்திப் பயனாளிகளாக உள்ளீர்க்குமாறு யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பான கோரிக்கை கடிதத்தை நேற்று வெள்ளிக்கிழமை காலை யாழ். அரச அதிபருக்கு மின்னஞ்சல் மூலம் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

தமது வாகனங்களுக்கான எரிபொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் வீடுகளில் பதுக்கி வைத்துள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சமுர்த்திப் பயனாளிகளாக உள்ள நிலையில், ஒரு றாத்தல் பாண் வாங்க முடியாத ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சமுர்த்திப் பயனாளிகாக உள்வாங்கப்படாமல் உள்ளனர் என்ற வேறுபாட்டையும் அவர் விவரித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி பெறும் குடும்பங்களில் 70 வீதமானவர்கள் உயர் வருமானம் பெறும் குடும்பங்கள் என, மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் பொது வெளியில் குறிப்பிட்டுள்ள கருத்தையும் அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

நாட்டில் வறுமை ஒழிப்புத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 78,441 குடும்பங்கள் சமுர்த்திப் பயனாளிகளாக உள்ளீர்க்கப்பட்டு அவர்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கப்படுகின்றன. இக் குறிப்பிட்ட குடும்பங்களில் ஆயிரக்கணக்கானோர் சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து, ஏறக்குறைய 15 வருடங்களாக சமுர்த்திப் பயனாளிகளாக உள்ளனர்.

மேற்படி மொத்த சமுர்த்திக் குடும்பங்களில் ஏராளமானோர் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதைக் காட்டிலும் உயர் வருமானம் பெறும் குடும்பங்களாவர். நூற்றுக்கணக்கானோர் கூலியாட்களை வைத்து தொழில்களை நடத்தும் முதலாளிகளாவர். பல்லாயிரக் கணக்கானோர் வாகனங்களை வைத்து தினசரி பல்லாயிரம் ரூபாய்களை உழைப்பவர்கள். ஆனால், பல்லாயிரக்கணக்கான அப்பாவிகள், கூலித் தொழில் செய்யும் குடும்பங்கள் சமுர்த்திக் கொடுப்பனவுகள் இன்றி காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தற்போதைய நிலையின்படி கூறப்போனால், எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் தேடிச் சென்று தமது வாகனங்களுக்கு எரிபொருளைப் பெற்றுவந்து வீடுகளில் கலன் கணக்காக சேமித்து வைப்பவர்களும், அத்தியாவசியப் பொருட்களை வீடுகளில் பதுக்கி வைத்திருப்பவர்களும் சமுர்த்திப் பயனாளிகளாக இருக்கின்ற அதே நேரம், தினமும் ஒரு றாத்தல் பாண் வாங்கவே கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ள அப்பாவிகள் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறான பாரிய வேறுபாடுகளுக்கு மத்தியில்தான் யாழ்.மாவட்ட அரச நிர்வாகம் மக்களுக்கான பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கின்றது என்பது வேதனையான விடயம். இந்த தகவல்கள் அதிகாரிகளுக்கு தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அதைவிட வேதனையானது. அதுவும் சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு 70 வீதம் பிழையானது எனத் தெரிந்திருந்தும் அது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காத யாழ். மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் -

யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் அண்மையில் பொது வெளியில் கருத்துக் கூறும்போது, "யாழ்.பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வின்படி சமுர்த்தி பெறும் 70 வீதமான குடும்பங்கள் உயர் வருமானம் பெறும் தகுதியற்றவர்கள்" என வெளிப்படையாக தெரிவித்திருக்கின்றார். இவ்வாறு தகுதியற்ற குடும்பங்களுக்கு தொடர்ந்தும் சமுர்த்தித் திட்டங்கள் சென்றுகொண்டிருப்பதை யாழ். மாவட்ட அரச நிர்வாகம் பார்த்துக்கொண்டிருப்பது அப்பாவிகளுக்கு இழைக்கும் அநீதியாகும்.

நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்ற தற்போதைய சூழலில், வறுமை ஒழிப்பு என்ற பட்டியலில் உள்ள சமுர்த்திக் குடும்பங்களுக்கே தொடர்ந்தும் உதவிகள் வழங்கப்படுகின்றன. சமுர்த்திக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், கொடுப்பனவு பெறத் தகுதியற்றவர்கள் 7500 ரூபா பெற்றுக் கொள்கின்ற அதேநேரம், முற்றிலும் தகுதியுடைய, அதி வறுமைக் குடும்பங்கள் காத்திருப்போர் பட்டியல் என்ற பெயரில் வெறும் 5000 ரூபாவைப் பெற்றுக்கொள்கின்றனர். இந்த வேறுபாடு களையப்பட வேண்டும்.

எனவே, யாழ். மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகள் உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். மாவட்டத்திற்கு என பொதுவான கொள்கையின்படி அரசியல் தலையீடுகள் ஏதுமின்றி சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு இடம்பெறவேண்டும்.

1. வீடுகளில் உழைக்கும் வயதுடைய நபர்கள்.
2. வீடுகளில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை
3. தொழில்களின் நிலமை, குடும்ப வருமானம்.
4. குடும்பத் தலைவர் அல்லது குடும்ப அங்கத்தவர்களின் நோய் நிலமை
5. விதவைகள், கைவிடப்பட்டோர், அங்கவீனர்கள்.
6. போர்ப் பாதிப்பிற்கு உட்பட்டவர்கள் போன்ற,

யாழ். மாவட்டத்துக்கு என பொதுவான கொள்கையை வகுத்து, அதன்படி யாழ். மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் கூறியதைப்போன்று, தகுதியற்ற 70 வீதமான குடும்பங்களையும் நீக்கி, வறுமையில் வாடுகின்ற குடும்பங்களின் வாழ்வில் ஒளி ஏற்றுங்கள். மிக விரைவாக இத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் நன்மைடையவர்.

அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்பதை கண்கூடாகப் பார்க்கின்றோம். அதுபோல, அநீதி செய்வோருக்கும், அநீதிக்கு துணை போவோருக்கும் அறம் கூற்றாகும். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சொந்த பொருளாதாரத்தை பெருக்குவதிலும் தமிழ் மக்களை அழிப்பதிலுமே அரசு கவனம்!

## சுட்டிக்காட்டுகிறார் கஜேந்திரன் எம்.பி.

*மட்டக்களப்பு, ஜூன் 11*

74வருடகாலமாக இந்த நாட்டை ஆண்டவர்கள் தங்களது சொந்த பொருளாதாரத்தினை பெருக்குவதிலும் தமிழர்களை அழிப்பதிலுமே கவனம் செலுத்தினார்களே தவிர தமது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான எந்த திட்டத்தையும் செய்யவில்லையென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் பயிர் விதைகள் மற்றும் நாற்றுகள் வழங்கிவைக்கும் நிகழ்வில் பங்கேற்று பேசிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு தொகுதி அமைப்பாளர் கணபதிப்பிள்ளை குககுமார ராசா மற்றும் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது முதல்கட்டமாக 100குடும்பங்களுக்கு பயிர் விதைகள் மற்றும் நாற்றுகள் வழங்கப்பட்டன. (அ)

ஈழநாடு
Eelanadu
11.06.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பஸிலின் விலகல்?

21ஆவது திருத்தச் சட்டத்தில் குழப்பங்கள் விளைவிக்கப்படலாம் என்னும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிழல் தலைவரென்று வர்ணிக்கப்படும், பஸில் ராஜபக்ஷ, தனது பாராளுமன்ற பதவியை இராஜிநாமா செய்திருக்கின்றார். மகிந்த ராஜபக்ஷவை தொடர்ந்து, பஸில் ராஜபக்ஷவும் வெளியேறியுள்ள நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமே தற்போது எஞ்சியிருக்கின்றார். தான் எந்தவொரு பதவியையும் வகிக்கப்போவதில்லையென்றும், ஆனால், இரட்டை குடியுரிமை விவகாரத்தை உள்ளடக்கியிருக்கும் 21ஆவது திருத்தச்சட்டத்தை தான் குழப்பக் கூடுமென்று மக்கள் எண்ணலாம் எனவேதான் தான் பதவியிலிருந்து வெளியேறுகிறார் என்றும் பஸில் குறிப்பிட்டிருக்கின்றார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவிலுள்ள பலர் பஸிலால் புதிதாக அரசியலுக்கு கொண்டுவரப்பட்டவர்கள். அவர்களைப் பொறுத்தவரையில் பொதுஜன பெரமுனவை விட்டால், வேறு தெரிவில்லை. அவ்வாறானவர்கள் ஏதோவொரு வகையில் பஸிலோடுதான் நிற்க வேண்டிய இக்கட்டு நிலையில் இருகின்றனர். இதனை சாதகமாகக் கொண்டு சில குழப்பங்களை ஏற்படுத்தும் வல்லமை பஸிலுக்கு உண்டு. ஆனால், குழப்பங்களின் விளைவு என்னவாகும் என்னும் அச்சம் ராஜபக்ஷக்களுக்கு உண்டு.

பொருளாதார சுமையால் வதைபட்டுக் கொண்டிருக்கும் மக்களின் கோபம் ராஜபக்ஷக்கள்மீது, மீண்டும் திரும்பலாம். மீளவும் தலைமறைவு நிலைக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ராஜபக்ஷக்களுக்கு ஏற்படும். அதேவேளை, இப்போதுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை ஏதோவொரு வகையில் பாதுகாக்க வேண்டிய தேவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உண்டு. அண்மையில் தான் தோல்வியடைந்த ஜனாதிபதியாக வெளியேற விரும்பவில்லையென்று, கோட்டாபய குறிப்பிட்டிருந்தார். அது நிகழ வேண்டுமென்றால், ரணிலின் நகர்வுகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படக்கூடாது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், பஸில் அவரின் பாராளுமன்ற உறுப்புரிமையிலிருந்து விலகியிருக்கின்றார்.

21ஆவது திருத்தச்சட்டம், இரட்டை குடியுரிமையை நீக்குவதற்கான சரத்துடன் நிறைவேற்றப்பட்டால், அதன் பின்னர், பஸில் பாராளுமன்றத்தில் இருக்க முடியாது. இதன் காரணமாகவே பஸில் முன் கூட்டியே, பதவியிலிருந்து மரியாதையாக விலகிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. பஸிலின் வெளியேற்றம் பிறிதோர் உண்மையையும் வெளிப்படுத்துகின்றது - அதாவது, ராஜபக்ஷக்கள் மாற்று வழிகளற்ற வகையில், கடும் நெருக்கடிக்குள் இருக்கின்றனர். இதற்கு மகிந்தவின் பதவி விலகலை தொடர்ந்து, திட்டமிட்டு தூண்டிவிடப்பட்ட வன்முறைகளே முதன்மையான காரணமாகும். அத்துடன், அரசாங்கத்தை முன்கொண்டு செல்லும் தார்மீக தகுதியை ராஜபக்ஷக்கள் முற்றிலுமாக இழந்துவிட்டனர்.

ராஜபக்ஷக்கள் இல்லாத ஓர் அரசாங்கம்தான் அனைவரின் எதிர்பார்ப்புமாக இருக்கின்றது. இந்த அடிப்படையில் அமைதிப் போராட்டங்களும் இடம்பெற்றன. கோட்டா கோ ஹோம் - என்னும் அடிப்படையில், ஒரு பகுதியினர் இப்போதும் போராட்டத்தைத் தொடர்கின்றனர். இங்கு கேள்வி போராட்டத்தில் எத்தனை தலைகள் தெரிகின்றன என்பதல்ல - மாறாக, அதன் குறியீட்டு ரீதியான பெறுமதியென்ன என்பதுதான்.

சர்வதேச ஊடகங்களில் 'கோட்டா கோ ஹோம் போராட்டம் முதன்மைப் படுத்தப்படுகின்றது. இதன் மூலம், இலங்கை ஓர் அரசியல் நெருக்கடிக்குள் இருப்பதான தோற்றம் சர்வதேச மயப்படுத்தப்படுகின்றது. இது, வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதிலும், உல்லாசப் பயணத் துறையை கட்டியெழுப்பவதிலும் ஒரு நிரந்தரத் தடையாகவே இருக்கும். இன்றைய நிலையில் சர்வதேச அபிப்பிராயத்தை வென்றெடுப்பதுதான், இலங்கையின் தலையாய பிரச்னையாகும். சர்வதேச அபிப்பிராயத்தை வென்றெடுப்பதற்கு, இலங்கையில் ஒரு ஸ்திரமான அரசியல் சூழல் இருக்கின்றதென்பதை அரசாங் கம் நிரூபித்தாக வேண்டும். போராட்டங்கள் தொடர்ந்தால், அதனை எவ்வாறு நிரூபிப்பது?

போராட்டத்தை தொடர்பவர்களின் இலக்கும் இதுதான். ராஜபக்ஷக்களை முழுவதுமாக அகற்றும் வரையில் ஏதோவொரு வகையில் இலங்கை ஒரு போராட்டச் சூழலுக்குள்தான் இருக்க நேரிடும். இந்தப் போராட்டச் சூழல்தான், முன்னர் மகிந்த ராஜபக்ஷவை அற்றியது. இப்போது பஸிலையும் அகற்றியிருக்கின்றது. ஏனைய ராஜபக்ஷக்களை அமைதிப்படுத்தியிருக்கின்றது. அதிகார சக்திகளை சமநிலைப்படுத்துவதற்கு, ஓர் எல்லைக்குள் முடக்குவதற்கு, ஜனநாயக ரீதியான போராட்டங்கள் அவசியமென்பது, இதன் மூலம் உறுதியாகியிருக்கின்றது. அரசை சமநிலைப்படுத்துவதற்கு வலுவான சிவில் சமூகமொன்று கட்டாயமானது. அரசை மட்டுமல்ல - அரசியல் கட்சிகளையும் கட்டுப்படுத்துவதற்கும் வலுவான சிவில் சமூகமொன்று அவசியம்.

# தமிழர்களைப் புறந்தள்ளியமை!

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கையில் தமிழர்களைப் புறந்தள்ளியமையால்தான் இன்று நாடு அதலபாதாளத்தில் வீழ்ச்சி கண்டுள்ளது என்று கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், 43ஆம் படையணி என்ற அமைப்பின் தலைவராக இருப்பவருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்திருந்தார்.

முன்னாள் அமைச்சராகவும் இருந்த பாட்டாலி சம்பிக்க ரணவக்கவின் இந்தக் கூற்று அவரின் காலம் கடந்த ஞானத்தையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

இலங்கை சுதந்திரமடைந்து எழுபது ஆண்டுகளுக்கும் மேலாகியுள்ளது. இலங்கையைப் போன்றே பிரிட்டிஷாரால் ஆளப்பட்ட இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் இன்று பொருளாதார ரீதியாக மிக மேம்பட்டவையாக இருக்கின்றன.

குறிப்பாக இந்தியா பல்லின, பல மத, பல கலாசார வடிவங்களை கொண்டிருந்தாலும் அந்த நாடு இன்று பெரிதும் பொருளாதார வளர்ச்சி கண்டிருப்பதற்கு அரசியல் அமைப்பின் வாயிலாக இனப் பிரச்னைகளுக்கு தீர்வு கண்டுள்ளமையே முக்கிய காரணமாகும்.

இந்தியாவிலுள்ள ஒவ்வோர் இனமும் அதன் தனித்துவத்தை பேணி ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் விதத்தில் மாநில வாரியாக ஒவ்வோர் இனத்தவரினதும் அரசியல் மற்றும் தனித்துவங்களைப் பாதுகாக்கும் வகையில் இந்தியா சமஷ்டி முறையிலான ஆட்சியமைப்பைக் கொண்டுள்ளது.

ஒரு தூர நோக்கோடு இந்தியா இன ரீதியான தனித்துவங்களைப் பேண சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொண்டமையே இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் அத்திபாரமிட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்தியாவில் இன, மத பூசல்கள் சுதந்திர போராட்டத்தின்போது மற்றொரு வடிவில் இடம்பெற்று வந்தன. இன்றும்கூட இந்தியாவில் இன, மத பூசல்கள் பெரியளவில் இல்லாத போதிலும் ஆங்காங்கே சிறிய அளவில் இருக்கின்றன. ஆனால், இந்த இன, மத பூசல்கள் இந்திய ஒருமைப்பாட்டுக்கு பூதாகரமாக ஒருபோதும் ஊறு விளைவிக்கக்கூடாதென்று கருதியே இந்தியா சுதந்திரம் பெற்றகையோடு இன ரீதியான அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொண்டதன் காரணமாகவே இந்தியா இன்று சகல இனத்தவரினதும் தனித்துவங்களை அங்கீகரித்து உயர்வான ஒரு நாடாக காணப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தமிழர்களைப் புறந்தள்ளியமையே நாடு இன்றைய அவல நிலைக்கு முக்கிய காரணம் என்று குறிப்பிட்டுள்ளதை நோக்குகையில் இன்றைய சந்ததி தென்னிலங்கையர்களின் தமிழர்கள் குறித்த பார்வையை சம்பிக்க ரணவக்க பிரதிபலித்துள்ளார் என்றே கருத முடியும்.

இலங்கையில் அன்றைய தலைவர்கள் சமஷ்டி முறையை தமிழர்களுக்கு வழங்க முன்வந்தபோது அதனை தமிழர்கள் ஏற்காது ஓர் ஒருங்கிணைந்த இலங்கையர்களாக வாழமுடியும் எனக்கருதினர்.

ஆனால் நாளடைவில் இனவாதம் ஓர் 'ஆலகாலவிஷ'மாக மாறிய நிலையில் இனக் கலகங்களாகவும் பின்னர் மூன்று தசாப்த கால யுத்தமாகவும் மாற்றம் கண்டிருந்தது.

தற்போது பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தமிழர்களைப் புறந்தள்ளியமை தவறாகும் என்று கூறியதை நோக்கும்போது கடந்த காலங்களில் மட்டுமல்ல. தற்போதும்கூட தமிழர்களைப் புறந்தள்ளியுள்ளமையாலேயே நாடு அதல பாதாளத்தில் வீழந்துள்ளது.

அரசியல் ரீதியாக புறந்தள்ளயதோடு பின்னர் கல்வி மற்றும், தொழில் ரீதியாகவும் புறந்தள்ளி தற்போது தமிழர்கள் இந்த நாட்டில் வாழ்ந்தமைக்கான அடையாளங்களையும் இல்லாதொழிக்கும் விதத்திலேயே இன்றைய ஆட்சியாளர்கள் இருந்து வருகின்றனர்.

வடக்கு - கிழக்கு தமிழர்கள் ஒரு சிறந்த மனித வளமாக நாட்டில் விளங்கியிருந்தனர். அவர்களது கல்வி மற்றும் தொழில் சார்ந்த முக்கியத்துவம் நாட்டுக்கு பெரிதும் பயன் பெறுவதாக இருந்து வந்திருந்தது. ஆனால், அந்த முக்கியத்துவங்களை சரிவர பயன்படுத்தாது அவர்களின் திறமைகளுக்கு முக்கியத்துவம் தராது தற்போது இன ரீதியான அவலங்களால் நாட்டை விட்டு தப்பியோடி தாம் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற நாடுகளில் பொருளாதார ரீதியாக மிக உன்னதமாக இருக்கும் தமிழர்களிடம் கையேந்தும் நிலைக்கு தென்னிலங்கையின் ஆட்சியாளர்கள் காணப்படுகின்றனர்.

தமிழர்களைப் புறந்தள்ளாது அவர்களின் திறமைகளை அங்கீகரிக்க வேண்டிய காலத்தில் அங்கீகரித்திருந்தால் இன்று நாடு தென்னாசியாவில் உயர்வான வளர்ச்சியை எட்டியிருக்கும். தமிழர்கள் நாட்டில் ஒருமைப்பாட்டோடு வாழவே விரும்பினார்கள். ஆனால், இனவாதம் கொடிய விஷ விருட்சமாக இன்றுவரை இருப்பதையே பாட்டாலி சம்பிக்க ரணவக்க கூறியுள்ளமை சுட்டிக் காட்டுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூன் - 10 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 28
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : துவாதசி




**மேடம்**
எண்ணம் நிறைவேறும். தடைபட்ட செயல்கள் நடந்தேறும். நன்மையான நாள். உங்கள் செயல்கள் பிறரால் பாராட்டப்படும். செல்வாக்கு உயரும். யோகமான நாள். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**இடபம்**
இழுபறியாக இருந்த வேலை முடியும்.முயற்சியில் இன்று வெற்றி பெறுவீர்கள். எதிரிகள் விலகிச் செல்வர்.எதிர்பார்ப்பு இன்று மதியத்திற்கு மேல் நிறைவேறும். வாக்கை காப்பாற்றுவீர்கள்.

**மிதுனம்**
வரவு அதிகரிக்கும்: பிள்ளைகளால் உண்டான பிரச்னை முடிவிற்கு வரும். தடைபட்ட வருவாய் வரும்.பிரச்னைகள் முடிவிற்கு வரும். பெற்றோர் ஆதரவால் தேவை நிறைவேறும்.

**கடகம்**
செயல்களில் மதியத்திற்கு மேல் பின்னடைவு ஏற்படும். அரசு விஷயத்தில் கவனம் தேவை.திட்டமிட்ட வேலைகளை முடிப்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும்.உறவுகளால் சங்கடம் ஏற்படலாம்.

**சிம்மம்**
எதிர்பார்த்தவற்றில் மதியத்திற்கு மேல் ஆதாயம் கூடும். எண்ணம் நிறைவேறும்.தடைகளை சரி செய்வீர்கள். அரசு வழியில் எதிர்பார்ப்பு மதியத்திற்கு மேல் நிறைவேறும்.திட்டமிட்ட செயல் நிறைவேறும்.

**கன்னி**
பொருட்களை கையாள்வதில் கவனம் தேவை. குடும்பத்தினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாமல் போகும். மதியத்திற்கு மேல் செலவு கூடும். மனதில் குழப்பங்கள் விலகும்.

**துலாம்**
மனம் மகிழும் சூழல் உருவாகும்.இழுபறியாக இருந்த வேலை மதியத்திற்கு மேல் நிறைவேறும். குழப்பம் தீரும்.செலவு கட்டுப்படும். சுயஆற்றலால் லாபம் ஈட்டுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
அலைச்சல், செலவு அதிகரிக்கும்.விறுவிறுப்பாக செயல்படுவீர்கள். மதியத்திற்கு மேல் எதிர்பாராத செலவு ஏற்படும். நம்பிக்கையுடன் செயல்பட்டு லாபம் காண்பீர்கள். மதியத்திற்கு மேல் செலவு கூடும்.

**தனுசு**
தொழிலை விரிவு செய்வீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். எதிர்பாராத ஆதாயம் வரும்.முயற்சி வெற்றியாகும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும்.

**மகரம்**
தொழிலில் முன்னேறுவீர்கள்.செயல்களில் இருந்த சங்கடம் விலகும். பண வரவு கூடும். நினைத்தது நிறைவேறும்.தனித்தன்மை வெளிப்படும். நினைத்ததை அடைவீர்கள். பணவரவு உண்டு.

**கும்பம்**
விருப்பம் நிறைவேறும். இரண்டு நாளாக அனுபவித்த சங்கடம் மறையும். மனதில் நிம்மதி உண்டாகும்.நெருக்கடி தீரும். லாபம் பெற புதிய வழிமுறைகளைக் காண்பீர்கள்.

**மீனம்**
எதிலும் கவனமுடன் இருங்கள். செயலில் தடுமாற்றம் ஏற்படலாம்.மதியம் வரையில் மனதில் மகிழ்ச்சி இருக்கும். அதன்பின் நெருக்கடி தீரும். பணியில் ஆர்வம் இருந்தாலும் நெருக்கடிக்கு ஆளாவீர்கள்.

### ஆறு பேர் விடுதலை:

# விரைவான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்கவேண்டும்!

### நாம் தமிழர் சீமான் வலியுறுத்து

சென்னை, ஜூன்.11

**6 பேரின் விடுதலைக்கான முன்னெடுப்புகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.**



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

ஏழு தமிழர் விடுதலை விவகாரத்தில், நீண்ட நெடிய சட்டப்போராட்டம் நடத்தியதன் பயனாக தம்பி பேரறிவாளன் விடுதலை பெற்றுள்ள நிலையில், மீதமுள்ள ஆறு பேருக்கும் விடுதலையை விரைந்து சாத்தியப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் தமிழக அரசு அலட்சியம் காட்டுவது ஏமாற்றமளிக்கிறது.

தம்பி பேரறிவாளன் தொடுத்த வழக்கின் தீர்ப்பில், அமைச்சரவைத் தீர்மானமே இறுதி முடிவென்றும், தமிழக அமைச்சரவையின் முடிவுக்கு ஆளுநர் கட்டுப்பட்டவர்தானென்றும், இந்த விடுதலை தொடர்பாக முடிவெடுக்க மத்திய அரசுக்கு அதிகாரமில்லை எனவும் விடுதலை கோப்பை குடியரசுத்தலைவருக்கு அனுப்புவதற்கு சட்டப்பூர்வ பின்புலமில்லையென்றும் தெளிவுபடக்கூறி, மாநிலத்தின் உரிமையை உறுதிப்படுத்தி, தமிழக அரசுக்கு வழிகாட்டியிருக்கிறது உச்ச நீதிமன்றம்.

ஆகவே, அதனை அடிப்படையாகக்கொண்டு ஆறு தமிழர்களையும் விடுதலைசெய்து மாநிலத்தின் தன்னுரிமையை நிலைநிறுத்த வேண்டியது தமிழக அரசின் தார்மீகக்கடமையாகும்.

ஆகவே, இந்த விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலின் முதன்மை கவனமெடுத்து, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை முன்வைத்து, தமிழக ஆளுநருக்கு உரிய அழுத்தம் கொடுத்து நளினி, ரவிச்சந்திரன் ஆகியோருக்கு ஏற்கனவே தொடர் விடுப்பு வழங்கப்பட்டு வரும் நிலையில் எஞ்சியவர்களான இராபர்ட் பயஸ், முருகன், சாந்தன் மற்றும் ஜெயக்குமார் ஆகிய நால்வருக்கும் நீண்ட சிறை விடுப்பு வழங்க முன்வர வேண்டுமெனவும் தமிழக அரசை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன் - என்றுள்ளது. (ஐ)

# வேலூரில் எம். ஜி. ஆருக்கு கோயில் ரூ. ஒரு கோடி செலவில் அமைகிறது!

வேலூர், ஜூன் 11



வேலூரில் எம். ஜி. ஆருக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் கோயில் கட்டும் பணி நேற்று ஆரம்பமானது.

வேலூர் மாவட்டம், காட்பாடி அருகே தொண்டான்துளசி கிராமம் உள்ளது. இந்த கிராமத்தைச் சேர்ந்த எம். ஜி. ஆரின் தீவிர விசுவாசிகளும் கிராம மக்களும் இணைந்து இந்தப் பணியை தொடங்கியுள்ளனர்.

சுமார் 4 பரப்பு காணியில் அமையவுள்ள இந்தக் கோயிலில் எம். ஜி. ஆருக்கு வெண்கல சிலையும் வைக்கப்படவுள்ளது.

இந்தக் கோயிலில் திருமண மண்டபமும் அமைக்கப்படவுள்ளது. ஒரு கோடி இந்திய ரூபாயில் அமைக்கப்படும் இந்தக் கோயிலை எம். ஜி. ஆரின் பிறந்த நாளில் திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

# ஆதீன விடயத்தில் தலையிடுவதை தி. மு. க. அரசு தவிர்க்க வேண்டும்!

### எடப்பாடி பழனிசாமி



தருமபுரம், ஜூன் 11

தருமபுரம் ஆதீனத்துடன் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி நேற்று சந்தித்து பேசினார். ஆதீனத்தை சந்தித்து அவர் ஆசி பெற்றார்.

அதன் பிறகு செய்தியாளர்களை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியவை,

ஆதீனங்கள் விவகாரத்தில் தேவையற்ற தலையீட்டை அரசு தவிர்க்க வேண்டும். மதம், கோயில் சார்ந்த விடயங்களில் தி. மு. க. அரசு தலையிடுவதை தவிர்க்க வேண்டும்.

யார் தவறு செய்தாலும், அதற்கு இறைவன் தக்க பதிலடி கொடுப்பார் - இவ்வாறு அவர் கூறினார்.(ஐ)

# தமிழகத்தில் மீண்டும் கொரோனா அலை?

சென்னை, ஜூன் 11

தமிழகத்தில் கொரோனா தொற்று மெல்ல அதிகரித்து வருகிறது. 100 இற்கு கீழ் இருந்த தொற்று பாதிப்பு தற்போது அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் கூறியவை வருமாறு,

தமிழகத்தில் பிஏ4, பிஏ5 வகை உறு மாறிய கொரோனா தொற்று பதிவாக தொடங்கியுள்ளது இது கொரோனா அலை கிடையாது. சிறிய ஏற்றம் தான். நாம் எச்சரிக் கையாக இருக்க வேண்டும். வரும் 12ஆம் திகதி தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது. அனைத்து இடங்களுக்கும் தேவையான தடுப்பூசி அனுப்பியுள்ளோம். இதுவரை 11.18 கோடி தடுப்பூசி போடப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## 30 எம்.பிக்களுக்கு இராஜாங்க அமைச்சு?

கொழும்பு, ஜுன் 11

30 தொடக்கம் 40 வரையான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வழங்க ஜனாதிபதியும் பிரதமரும் ஆலோசித்துள்ளனர்.

இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் நால்வருக்கும் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சிலரும், அரசில் இணைந்து இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அ.அரவிந் குமார், ச.வியா ழேந்திரன், சுரேன் ராகவன், காதர் மஸ்தான் உள்ளிட்டவர் களுக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன. (அ)

## இ.போ.ச ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜுன் 11

நாட்டின் பல பாகங்களில் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சம்பள முரண்பாடு தொடர்பான விடயங்களை முன்வைத்து குறித்த ஊழியர்கள் இவ்வாறு பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# சாணக்கியன் எம்.பியின் உரை திரும்ப பெறப்படவேண்டும்

## சபையில் பிரதமர் ரணில் வலியுறுத்து



**கொழும்பு, ஜுன் 11**

**பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கடந்த 20ஆம் திகதி பாராளுமன்றில் ஆற்றிய உரை மீளப்பெற வேண்டும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று சபையில் தெரிவித்தார்.**

இல்லாவிட்டால், சபாநாயகர் அதனை உரிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்றும் பிரதமர் கோரினார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவுக்கான அனுதாபப் பிரேரணையில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்படுவாராயின், அது பாராளுமன்றத்துக்கு ஏற்பட்டுள்ள பிரச்னையாகும்.

ஏன் இந்த சம்பவம் இடம் பெற்றது? அவர் ஏன் வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார். பொலிஸ் உத்தியோகத்தரை ஏன் கொலை செய்தனர்? இதனை யார் செய்தார்கள் என்பது குறித்து விசாரணை இடம் பெறுகின்றமையால், நான் அது குறித்து மேலதிக கருத்து வெளியிடப்போவதில்லை.

மே மாதம் 20 ஆம் திகதி ஹன்சார்ட் அறிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கூறியிருந்ததை நான் இங்குக் குறிப்பிடுகின்றேன். 20 ஆம் திருத்தம் போன்ற நாட்டுக்கு தீங்கிளைக்கும் விடயத்துக்கு வாக்களித்தமையால்தான் வீடுகளுக்கு தீ வைத்தனர். அதாவது, எதிர்க் கருத்து உள்ளமையால் வீடுகளுக்கு தீவைத்தனர். 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு களின் பாதீடுகளில் தவறான பொருளாதார கொள்கைகள் இருந்தன.

அவற்றுக்கு கையுயர்த்திய வர்களினால்தான் வீடுகளுக்கு தீ வைத்தனர். மக்களின் எண்ணங்களைக் காட்டிக் கொடுத்தமையால்தான், அவர்களுக்கு அப்படி நடந்தது என்பதை நினைவிற்கொள்ளுங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எவ்வாறு இப்படி பேச முடியும்? லக்ஸ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டபோது, அவரை விமர்சித்து புலிகள் அமைப்பினர் வெளியே கருத்து வெளியிட்டனர்.

ஆனால், இப்போது உள்ளேயே அதனை செய்கின்றனர். இதன் அர்த்தம் என்ன? அப்படியென்றால் வீடுகள் தீ வைக்கப்பட்டதை அவர் அனுமதிக்கிறாரா? இந்த மரணத்தை அவர் அனுமதிக்கிறாரா? குமார வெல்கம தாக்கப்பட்டதை அனுமதிக்கிறாரா? என்பதை இந்த சபையில் அதனை கேட்க வேண்டி உள்ளது.

பாராளுமன்றத்தை சுற்றி வளைத்தபோது, அங்குவந்து தங்களுக்கு பாதிப்பு இல்லை என்று கூறினர்.

அடுத்த நாள் முன்னிலை சோசலிசக் கட்சியின் குமார குணரத்னதுடன் இருக்கும் படம் உள்ளது. முன்னிலை சோசலிசக் கட்சி, ஜனநாயக ரீதியாக செயற்படுவதற்கு எவரும் எதிர்ப்பு இல்லை.

அதற்கு அப்பால் சென்றால்? இதுதானா இந்த பாராளுமன்றில் நடக்கிறது? எனவே, அடுத்த பாராளுமன்ற அமர்வு நிறைவடைவதற்குள் அவர் கவலை தெரிவித்து, இதனை மீளப் பெறாவிட்டால், சபாநாயகர் அதனை உரிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன், இது போன்று இந்தச் சபையில் நடக்கக் கூடாது-என்றார்.

இதன்போது சபாபீடத்திற்கு தலைமை தாங்கிய பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, பிரதமரின் கருத்து குறித்து விசேடமாக ஆராய்ந்து செயற்படுவது தொடர்பில் சபாநாயகருக்கு தாம் அறியப்படுத்துவதாக குறிப்பிட்டார். (அ)

# நிதியுதவி, முதலீடு, ஏற்றுமதியை சிங்கப்பூர் அதிகரிக்கவேண்டும்!

## இலங்கை அரசு கோரிக்கை

கொழும்பு, ஜுன் 11

இலங்கை தற்போது எதிர்கொண்டு வரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நிதியுதவியைப் பெறுவதற்கும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கும், சிங்கப்பூருக்கான இலங்கை ஏற்றுமதிகளுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் உதவுமாறு சிங்கப்பூர் அரசாங்கத்திடம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி. விவியன் பாலகிருஷ்ணன் அழைப்பின் பேரில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஜுன் 8 ஆம், 9ஆம் திகதிகளில் சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். நான்கு வருடங்களின் பின்னர் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒருவரின் சிங்கப்பூருக்கான உத்தியோகபூர்வ விஜயமாக இது அமைந்தது.

இந்த விஜயத்தின் போது, சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சருடன் இருதரப்பு சந்திப்பொன்று இடம்பெற்றதனைத் தொடர்ந்து அமைச்சர் பீரிஸுக்கு உத்தியோகபூர்வ மதிய உணவு விருந்தளிக்கப்பட்டது.

எதிர்வரும் 13ஆம் திகதி சிங்கப்பூரின் துணைப் பிரதமராக பதவியேற்கவிருக்கும் சிங்கப்பூரின் நிதி அமைச்சர் லோரன்ஸ் வோங்கையும் அமைச்சர் பீரிஸ் சந்தித்தார். சிங்கப்பூர் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் எஸ். ஈஸ்வரன் மற்றும் பல முக்கிய பிரமுகர்களுடன் இணைந்து, சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் கே. சண்முகம் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு ஜுன் 8ஆம் திகதி மதிய உணவு விருந்தளித்தார்.

சிங்கப்பூர் தரப்புடனான கலந்துரையாடலின் போது இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் பீரிஸ், இலங்கைக்கான நிதியுதவியைப் பெறுவதற்கும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கும், சிங்கப்பூருக்கான இலங்கை ஏற்றுமதிகளுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் சிங்கப்பூர் அரசாங்கத்தின் ஆதரவையும் உதவி கோரினார்.

சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க சிங்கப்பூர் அரசாங்கத்தின் ஆதரவையும் அமைச்சர் கோரினார். தற்போது, சிங்கப்பூருக்கு சுகாதாரப் பணியாளர்களை குறிப்பாக செவிலியர்களை அனுப்புவதில் இரு நாடுகளும் நெருக்கமாக செயறபட்டு வருகின்றன.

அமைச்சர் பீரிஸ், சிங்கப்பூரின் சிரேஷ்ட அமைச்சரும் சமூகக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சருமான தர்மன் சண்முகத்தை சந்தித்துப் பேசிய அதே வேளை, சிங்கப்பூரின் சுகாதார மற்றும் மனிதவள சிரேஷ்ட இராஜாங்க அமைச்சர் கலாநிதி. கோ போ கூன், இலங்கைக்கான சிங்கப்பூரின் வதிவிடமற்ற உயர்ஸ்தானிகர் சந்திர தாஸ், டெமாசெக் சர்வதேச அறக்கட்டளையின் தலைமை நிறைவேற்று அதிகாரியும், டெமாசெக் குழுமத்தின் துணைத் தலைவருமான (ஆசியா) பெனடிக்ட் சியோங் மற்றும் சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட பிரதிநிதி களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த உரையாடல்களின் போது, தேவையான மருத்துவப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதன் மூலம் இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு பிரதிபலிப்பை ஆதரிக்கும் வகையில் கோவிட்-19 தொற்று நோய் முழுவதும் நீட்டிக்கப்பட்ட விரிவான உதவிகளுக்காகவும், சிங்கப்பூர் மற்றும் வெளிநாடுகளில் டெமாசெக் மூலம் இலங்கை முகமூடிகளை உற்பத்தி செய்து, விநியோகச் சங்கிலியின் இடையூறுகளைச் சமாளிப்பதற்கு ஒத்துழைத்தமைக்காகவும், சிங்கப்பூர் அரசாங்கம் மற்றும் டெமாசெக் சர்வதேச அறக்கட்டளை ஆகியவற்றிற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கம் மனிதாபிமான உதவிக்காக அண்மையில் செய்த வேண்டுகோளுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் 100,000 அமெரிக்க டொலர்களை உறுதியளித்ததற்கும் அமைச்சர் பாராட்டுக்களைத் தெரிவித்தார். செஞ்சிலுவைச் சங்கத்தின் முறையீட்டின் முதல் மருத்துவப் பொருட்கள் ஏற்கனவே இலங்கையை வந்தடைந்துள்ளன.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயத்திற்கான தூதுக்குழுவில் உயர்ஸ்தானிகர் சசிகலா பிரேமவர்தன, சிங்கப்பூரில் உள்ள இலங்கை தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், அமைச்சரின் தனிப்பட்ட செயலாளர் டி.என். கம்லத் மற்றும் இலங்கை தேசிய தொழிற்பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் தலைவர் ஆகியோர் இடம்பெற்றருந்தனர்.

உத்தியோகபூர்வ விஜயத்தைத் தொடர்ந்து, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் நேற்று முதல் இன்று வரை நடைபெறவுள்ள ஐ.ஐ.எஸ்.எஸ். -ஷாங்க்ரி-லா உரையாடல் 2022 இல் கலந்துகொள்ளவுள்ளார்.

சிங்கப்பூரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தினால் இந்த உத்தியோகபூர்வ விஜயம் ஒருங்கிணைக்கப்பட்டது. (அ)

# அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் கைது!

## நுகர்வோர் அதிகாரசபை நடவடிக்கை

**கொழும்பு, ஜூன் 11**

**நிர்ணயிக்கப்பட்ட சந்தை விலைக்கு மேல் அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை கைது செய்யும் நடவடிக்கையை நாடளாவிய ரீதியில் இலங்கை நுகர்வோர் அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.**

அண்மையில் 12 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், உள்ளூர் சந்தையில் அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் அரிசிவிற்பனை செய்யப்பட்டதற்கு எதிராக மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் பிரகாரம், 1 கிலோகிராம் நாட்டு அரிசியின் விலை ரூபா 220, சம்பா அரிசி 1 கிலோகிராம் 230 ரூபாவுக்கும், கீரி சம்பா அரிசி 1 கிலோகிராம் 260 ரூபாவுக்கும் விற்பனை செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்த நான்கு மாதங்களுக்கு தேவையான அரிசியை இறக்குமதி செய்யுமாறு விவசாய அமைச்சு வர்த்தக அமைச்சுக்கு அறிவித்துள்ளது. (அ)



# மடு திருத்தல ஆடி மாத திருவிழா; நேற்று விசேட கலந்துரையாடல்

கொழும்பு, ஜூன் 11

எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி நடைபெறவுள்ள மன்னார் மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழாவிற்கான முன் ஆயத்த கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலின் ஏற்பாட்டில் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இது இடம் பெற்றது.

இந்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்,பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த இரண்டு வருடங்கள் கொரோனா தொற்று காரணமாக அதிகமான மக்கள் மடு திருத்தலத்திற்கு வருகை தரவில்லை.

இம்முறை ஆடி திருவிழாவுக்கு சுமார் 2 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக சுகாதாரம், போக்குவரத்து, குடிதண்ணீர், மின்சாரம்,பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் இம்முறை மடுத் திருத்தல பகுதிகளில் அதிக எண்ணிக்கையான உணவகங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நியாயமான விலையிலும், சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக உணவு பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையினர் மற்றும் நுகர்வோர் அதிகார சபையினர் முழுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

பிரதேச சபையின் அறிக்கையின் படி இம்முறை வியாபார நிலையங்களுக்கு வரி அறவிடப் படாதுவிட்டாலும், ஆவணி திருவிழாவுக்கு அமைக்கப்படும் கடைகளுக்கு வரி அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதற்கு உணவகம் மற்றும் ஏனைய வியாபார நிலையங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண் டும் என கோரிக்கை முன்வைக் கப்பட்டது.

மேலும் சோதனை கெடுபிடிகளை குறைத்துக்கொள்ள மன்னார் மாவட்டத்தில் இருந்து மடு திருத்தலத்துக்கு வரும் பக்தர்கள் தமது பயணப் பொதி கொண்டு வருவதை தவிர்த்துக் கொள்ள கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எதிர் வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை ஆடி மாத திருவிழா கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி ஆடி மாதம் 2ஆம் திகதி திருவிழா நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அநுராதபுரம் மாவட்டத்தில் தலைதூக்குகின்றது எயிட்ஸ்

கொழும்பு, ஜூன் 11

இந்த வருடத்தின் கடந்த ஐந்து மாதங்களில் மாத்திரம் அநுராதபுரம் மாவட்டத்தில் இருந்து எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்று மூலம் பாதிக்கப்பட்ட 13 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பாலியல் நோய்கள் தொடர்பான சுகாதார சேவைகளுக்கான நிலையத்தின் வைத்திய அதிகாரி ஹேமா வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

எய்ட்ஸ் தொற்று ஏற்படுவதற்கு பாதுகாப்பற்ற பாலுறவு முக்கிய காரணம் என்று திருமதி வீரக்கோன் இது பற்றிய கலந்துரையாடலில் வலியுறுத்தியுள்ளார். அநுராதபுரம் மாவட்டத்தின் கஹடகஸ்திகிலிய, தம்புத்தேகம, ஹொரவப்பொத்தான, அநுராதபுரம் மத்திய நுவரகம் பளாத்த மற்றும் மெதவச்சிய ஆகிய பகுதிகளிலேயே தொற்றுக்குள்ளான பலர் காணப்படுகின்றனர்.

சமீபத்திய ஆண்டுகளில் அனுராதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ள எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், 2022 இன் முதல் 5 மாதங்களில் 13 பேர் பதிவாகியுள்ளனர். இது பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எனலாம்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் இருந்து எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான முதலாவது நபர் பதிவாகியிருந்தார். அதன் பின்னர் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட எச்.ஐ.வி தொற்றினால் 2020 ஆம் ஆண்டில் மாத்திரம் 15 நோயாளர்கள் இனங்காணப்பட்டதன் மூலம் அதிகூடிய நோயாளர்கள் பதிவாகியிருந்தனர் என வைத்திய அதிகாரி ஹேமா வீரக்கோன் தெரிவித்தார்.

இதுவரை அநுராதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ள மொத்த எச்.ஐ.வி தொற்றாளர்களில் சுமார் 10 வீதமானோர் மரணமடைகின்றனர். எச்.ஐ.வி நோயை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிப்பதன் மூலம் மக்கள் சிகிச்சைகளுடன் வாழ முடியும்.

ஆனால், எச்.ஐ.வி பற்றிய பரிசோதனை செய்வதில் பலர் ஆர்வம் காட்டாததால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இந்த நோய்த் தொற்றுகளின் பரவலைக் கட்டுப்படுத்தலாம். குறிப்பாக பாதுகாப்பற்ற உடலுறவுக்குப் பிறகு இரத்தப் பரிசோதனை செய்ய நீங்கள் ஆசைப்பட்டால் அநுராதபுரம் பாலியல் நோய்கள் சுகாதார சேவைகளுக்கான மையத்துடன் தொடர்பு கொள்ளலாம். அந்த நிலையம் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது-என்றார் மருத்துவ அதிகாரி ஹேமா வீரக்கோன். (அ)

# 3 வேளை சாப்பாடு பெறமுடியாத நாட்டு மக்களுக்கு இலவச உணவு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 11

3 வேளை உணவை பெற்றுக் கொள்ள முடியாத 10 வீத மக்களுக்கு உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் இலவசமாக உணவை வழங்க முடியும் எனத் தான் நம்புவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இலங்கையி லுள்ள ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட பிரதமரின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி சமரதுங்க, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து விளக்கமளித்தார்.

நாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாடு காரணமாக உணவுப் பாதுகாப்புத் திட்டமொன்றை ஆரம்பிக்க உள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 3 வேளை உணவை பெற்றுக்கொள்ள முடியாத 10 வீத மக்களுக்கு அரசாங்கம் இலவசமாக உணவை வழங்க முடியும் என தான் நம்புவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் கூறினார்.

நாட்டின் உண்மையான நிலையை வெளிப்படுத்த அரசாங்கத்துக்கு உதவுமாறு ஊடக நிறுவன பிரதானிகளிடம் வேண்டுகோள் விடுத்த பிரதமர், தேவையான போது ஊடகங்கள் அரசாங்கத்துக்கு பொறுப்பு கூறவேண்டும் என்றும் பொறுப்பான அறிக்கையிடலை மேற்கொள்ளுமாறும் கோரினார். (அ)



# வவுனியாவில் மக்களுக்கு உதவித் திட்டம் வழங்கல்

மன்னார், ஜூன் 11

மருத்துவர் செ.லவனின் நினைவாக நேற்று பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

சர்வமத ஆன்மீக அறக்கட்டளையின் ஏற்பாட்டில் வவுனியா கோவில்குளம் கமநல சேவை திணைக்கள மண்டபத்தில் தென்னை அபிவிருத்தி திணைக்களத்தின் வட பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், வவுனியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரேஸ்குமார், பொறியியலாளர் வதனகுமார் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு தென்னை மரக்கன்றுகளும், தானிய விதைகள் மற்றும் கோழிக்கூடுகளும் வழங்கப்பட்டன. (அ)

# நயினாதீவு அம்மன் திருவிழாவை சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன். 11

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் 2022ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெறக்கூடிய வாறு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். இதன் முன்னாயத்த கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. அதனடிப்படையில் திருவிழாவுக்கு தேவையான பாதுகாப்பு முன்னேற்பாடுகள், படகு,தரை போக்குவரத்து, சுகாதார நடைமுறைகள், உணவு, குடிதண்ணீர், மற்றும் மின்சார விநியோகம் மற்றும் வீதி திருத்தம் போன்ற மிக அத்தியாவசியமான தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டது என யாழ். அரச அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வேலைகளுக்கு பொறுப்பான திணைக்களம் மற்றும் பிரதேச சபையினர் அதற்குரிய பொறுப்புகளை ஏற்று முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளோம்.

கடல் போக்குவரத்து காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெறக்கூடிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல 12ஆம் திருவிழாக்கு பின்னர் இரவு 9 மணி வரை கடல் போக்குவரத்தை விரிவுபடுத்தி தருமாறு கோரியிருகின்றோம். அதேபோல தரை போக்குவரத்தும் அவ்வாறு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுவதாக தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக பொலீத்தின் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளோம்.

நயினாதீவு ஆலயப் பிரதேசம் புனித பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் மது அருந்துதல், மாமிசங்களை விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆகவே பக்தர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதேபோல படகுப் போக்குவரத்தில் ஈடுபடும் அத்தனை படகுகளும் தங்களுக்குரிய தகுதிச் சான்றிதழைப் பெற்ற பின்னரே சேவையில் ஈடுபடமுடியும்

அத்தோடு படகில் பயணிப்பவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு அங்கிகள் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே இவ்வருட நாக பூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் மிகவும் சிறப்பாக இடம் பெறுவதற்குரிய முன்னேற்பாடுகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடுபாதுகாப்பு நடவடிக்கைகளை பொறுத்தவரை பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து ஏற்பாடுகளை முன்னெடுப்பர்.

அத்தோடு மிக முக்கியமாக ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் தங்கள் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்களை பாதுகாப்பாக பேண வேண்டும். ஏனெனில் தற்போதைய நெருக்கடி நிலையில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

அத்தோடு கடல் பயணம் மற்றும் தரைப் பயணங்களின் போது சிறுவர்கள் மற்றும் வயது குறைந்தவர்கள், முதியவர்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் தாங்களாகவே முன்னெடுக்கவேண்டும்- என்றார். (அ-03)

# நெல்லியடி மத்திய கல்லூரியில் குளவிக்கொட்டி 19 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 11

யாழ்ப்பாணம் வடமராட்சி நெல்லியடி மத்திய கல்லூரி விளையாட்டுப் போட்டி ஒன்றின்போது கூடியிருந்த மாணவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்கானதில் 19 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடர் குறித்த கல்லூரியில் நடைபெற்றுக்கொணடிருந்த போதே இந்த சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவத்தில் ஆசிரியர்கள் இருவரையும் குளவிகள் கொட்டியுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்றால் நடவடிக்கை!

## யாழ். அரச அதிபர் நேற்று அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன். 11

யாழ்.மாவட்டத்தில் அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை மீறிஅரிசி விற்பனை செய்வோருக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித் தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் பொருட்களுக்கான விலை அதிகரித்து காணப்படுகின்றது.

பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங் களை தவிர்க்கும் வகையில் வியாபாரிகள் அத்தியாவசிய பொருட்களை மிகவும் நியாயமான விலையில் வழங்க வேண்டும்.

அதே நேரத்தில் தற்போது அரசாங்கம் அரிசிக்குரிய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்துள்ளது. அந்த நிர்ணய விலைக்கு உட்பட்ட வகையில் பொருட்களை விற்கவேண்டும்.

சில்லறை விற்பனையாளர்களும் இந்த விடயத் தில் அதிக கவனம் எடுக்கவேண்டும். அரிசியை அதிக விலைக்கு விற்று எங்கள் பாவனையாளர்களை கஷ்டத்துக்கு உள்ளாக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றோம்.

அதே நேரத்தில் அரசாங்கம் நிர்ணயித்த விலை யானது நியாயமான விலையாக காணப்படுகின்றது. அதே நேரத்தில் எதிர்காலங்களில் யாழில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் ஊடாக விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

யாழ்.மாவட்ட பாவனையாளர்கள் அலுவல் கள் அதிகார சபையினரின் கண்காணிப்பின் மூலம் கட்டுப்பாடு விலையை மீறி அரிசி விற்போருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளோம் - என்றார். (அ-03)

# தீவக கல்வி வலயத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் பலர் வெளியேற முயற்சி

## இது அபாயகரமானது என்கிறது இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன். 11

நடைமுறைக்குச் சாத்தியமில்லாத நிலத் தொடர்புகளற்ற தீவுகளில் பணியாற்றும் பல ஆசிரியர்களுக்கு உள்ளக இடமாற்றம் எனும் பெயரில் சுற்றறிக்கைக்கு முரணாக ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுகின்றன. இதனால் பல சிரமங்களுக்கு மத்தியில் தொடர்ச்சியாக பணியாற்றும் ஆசிரியர்கள் தாம் நீண்டகாலம் தீவகத்தில் கடமையாற்றிவிட்டதாகவும் அதனால் தாமும் மற்றவர்களைப்போல நகர்ப்புற பாடசாலைகளுக்குச் செல்ல தகுதியுடையவர்களாக இருப்பதாகவும் தங்களையும் விடுவிக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு அர்ப்பணிப்போடு கடமையாற்றும் ஆசியர்கள் தீவகத்தில் இருந்து வெளியேறினால் தீவகத்தில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறை இன்னும் மோசமடையும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

இது குறித்து சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்-

வடக்கின் சில வலயங்களில் நடைமுறைப்படுத்தப்படும் முறையற்ற இடமாற்றங்களால் அதிகஷ்ட, கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். இத்தகைய செயற்பாடுகள் பழிவாங்குதல், அரசியல் பின்னணி போன்ற காரணங்களால் முன்னெடுக்கப்படுவதாகவும் செல்வாக்குள்ள சிலர் தாம் நினைத்த இடங்களுக்கு நகர்த்தப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

அதேவேளை ஒருசில அதிபர்கள், கல்வி அதிகாரிகள் ஒரே நிலையத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக கடமையில் உள்ளனர். அவர்களுக்கு அவர்களின் சேவை நிபந்தனையில் உள்ள முறைமை பின்பற்றப்படுவதில்லை. யாழ். கல்வி வலயத்தில் நியமனக் காலம் முதல் 24 ஆண்டுகளாக ஒருவர் ஒரே பாடசாலையில் அதிபராக உள்ளார். இதுபற்றி பலரும் முறைப்பாடு செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக பழிவாங்கும் நோக்கோடு சில பெண் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதும் வேதனத்தை நிறுத்துவதும் சாதாரணமாக உள்ளது - என்றுள்ளது. (அ)

# டிசெம்பர் வரை தேவையான அரிசி நாட்டில் கையிருப்பில்

கொழும்பு, ஜூன். 11

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குப் போதுமான அரிசி தொகை நாட்டில் இருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பற்றாக்குறையாக உள்ள அரிசி தொகை வர்த்தக அமைச்சினால் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வருடாந்த அரிசி நுகர்வானது 24 இலட்சம் மெற்றிக் தொன்னாக உள்ளநிலையில், வருடாந்த அரிசி உற்பத்தியானது 16 இலட்சம் மெற்றிக் தொன்னாக காணப்படுகிறது.

இந்த அறுவடையானது 8 மாத காலப்பகுதிக்குப் போதுமானதாகும். எனவே, நான்கு மாத காலப்பகுதிக்கு அரிசி பற்றாக்குறையாகும் நிலைமை உள்ளது. இம்முறை சிறுபோகத்தில் திட்டமிடப்பட்ட பயிர் நிலத்துக்கு அதிகமான நிலப்பரப்பில் பயிரிடுவதற்கு விவசாயிகள் முன்வந்துள்ளனர்.

2020ஆம் ஆண்டு சிறுபோகத்தில் 443,362 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது. 2021ஆம் ஆண்டு இந்த நிலப்பரப்பின் அளவானது 445,000 ஹெக்ரேயராக காணப்பட்டதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்த ஆண்டு குறித்த பயிர் நிலத்தின் அளவானது 447,000 ஹெக்ரேயராக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோது, அவர் இதனைக் கூறினார்.

இந்த ஆண்டு முன்னதாக, 244, 000 ஹெக்ரேயர் நிலப்பரப்பில், பயிர் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டிருந்தது.

எனினும், தாங்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக, தற்போது 447, 000ஹெக்ரேயரில் பயிரிடும் பணிகள் இடம்பெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

மக்கள் தற்போது, அரிசியைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தப் பார்க்கின்றனர்.

தற்போதைய நிலைமையில், இந்த ஆண்டின் இறுதி சில நாட்களின்போதே அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும். அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்துக்கே அரிசி தேவையாக உள்ளது.

339,000 மெற்றிக் தொன் அரிசி கடந்த வாரம் கொள்வனவு செய்யப்பட்டது. இந்தத் தொகையை விடவும், இன்னும் சிறிதளவான அரிசியே அவசியமாக உள்ளது. அதற்கான முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பை முகாமை செய்வதற்காக, நெல் சந்தைப் படுத்தல் சபையின் கையிருப்பில் உள்ள நெல் தொகையினை அரிசியாக சந்தைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, அரிசி தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என அச்சமடைந்து, பொதுமக்கள் அரிசியைக் கூடுதலாக கொள்வனவு செய்து சேமித்து வைக்கவேண்டிய அவசியமில்லை என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார். (அ)

# யுக்ரேன் போரால் உலக அளவில் உணவு நெருக்கடி ஏற்படும் அபாயம்!

## உலக வர்த்தக அமைப்பு எச்சரிக்கை



யுக்ரேன் போரால் தொடங்கிய உணவு நெருக்கடி பல ஆண்டுகளுக்கு நீடிக்கலாம் என, உலக வர்த்தக மையத்தின் தலைமை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, கோதுமை மற்றும் உரங்கள் பற்றாக்குறையால் ஆப்பிரிக்க நாடுகள் கடுமையாக பாதிக்கப்படலாம் என, உலக வர்த்தக அமைப்பு தலைமை இயக்குனர் எங்கோசி ஒகொன்ஜோ-இவேலா தெரிவித்தார்.

லட்சக்கணக்கிலான தொன்கள் அளவுக்கு தானியங்கள் சேமிப்புக் கிடங்களில் கிடத்தப்பட்டுள்ளன. அவை போர் காரணமாக யுக்ரேன் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தானியங்களின் விலை உயர்வது "உண்மையில் வேதனைக்குரியது" என அவர் தெரிவித்தார்.

### கோதுமை விலை உயர்வு

உலகளவில் கோதுமையை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் நாடாக யுக்ரேன் உள்ளது. உலக சந்தையில் யுக்ரேனின் கோதுமை ஏற்றுமதி 9 சதவீதமாக உள்ளது. மேலும் அந்நாட்டின் சூரியகாந்தி எண்ணெய் ஏற்றுமதி 42 சதவீதம் என்ற அளவிலும் சோளம் ஏற்றுமதி 16 வசதவீதம் என்ற அளவிலும் இருக்கிறது.

தானிய விலைகள் உலக அளவில் உயர்ந்துவரும் நிலையில், கருங்கடல் துறைமுகங்களில் ரஷ்ய தடையாலும், கடற்கரையில் ரஷ்ய, யுக்ரேனிய கண்ணிவெடிகளாலும் யுக்ரேனில் 20 முதல் 25 மில்லியன் தொன் கோதுமையை வெளியே அனுப்பமுடியாத நிலை உருவாகியுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கோதுமை விலை 59 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும், சூரியகாந்தி எண்ணெய் விலை 30 சதவீதம், சோளத்தின் விலை 23 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் ஒகொன்ஜோ-இவேலா தெரிவித்தார்.

ஒடேசா மற்றும் மற்ற யுக்ரேனிய துறைமுகங் களிலிருந்து வெளியே றும் டேங்கர்களுக்காக, துருக்கிய கடற்படை துணையுடன் "தானிய வழித்தடத்தை" அமைப் பதற்கான முயற்சிகளை ஐ.நா மேற்கொண்டு வருகிறது.

தானிய விலைகள் உலக அளவில் உயர்ந்து வரும் நிலையில், கருங்கடல் துறைமுகங்களில் ரஷ்ய தடையாலும், கடற்கரையில் ரஷ்ய, யுக்ரேனிய கண்ணி வெடிகளாலும் யுக்ரேனில் 20 முதல் 25 மில்லியன் தொன் கோதுமையை வெளியே அனுப்பமுடியாத நிலை உருவாகியுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கோதுமை விலை 59 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும், சூரியகாந்தி எண்ணெய் விலை 30 சதவீதம், சோளத்தின் விலை 23 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் ஒகொன்ஜோ-இவேலா தெரிவித்தார்.

ஆனால், கருங்கடலில் உள்ள யுக்ரேனிய துறைமுகங்களில் உள்ள கண்ணிவெடிகளை அந்நாடு அகற்ற வேண்டும் என, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜெய் லாவ்ரோவ் தெரிவித்துள்ளார்.


எங்கோசி ஒகொன்ஜோ-இவேலா

"யுக்ரேனிய துறைமுகங்களிலிருந்து வெளியேறி துருக்கிக்கு செல்லும் கப்பல்களின் பாதுகாப்புக்கு உறுதியளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என, தினமும் கூறுகிறோம். துருக்கியின் ஒத்துழைப்புடன் இதனை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்," என, அவர் புதன்கிழமை தெரிவித்தார்.

இதனிடையே, கப்பல்களை அனுப்புவதற்கு முன்னர் "பயனுள்ள பாதுகாப்பு உத்தரவாதங்கள்" தங்களுக்கு தேவை என யுக்ரேன் தெரிவித்துள்ளது. கடலிலிருந்து ஒடேசாவைத் தாக்கு வதற்கு அவ்வழித்தடத்தை ரஷ்யா பயன்படுத்தலாம் என யுக்ரேன் குரல் எழுப்பியுள்ளது.

400 மில்லியன் பேருக்கு உணவ ளிக்கும் வகையில் யுக்ரேன் தானியங் களை உற்பத்தி செய்கிறது. ஆனால், துறைமுகங்களுக்கான தடை காரணமாக அவற்றின் ஏற்றுமதியை வெகுவாக குறைத்திருப்பதாக ரஷ்யா மீது குற்றம் சாட்டப்படுகிறது.




மத்திய கிழக்கில் உள்ள சில நாடுகள் மற்றும் ஆப்பிரிக்கா இந்த பற்றாக் குறையை உணர்வதாக உள்ளன.

லிபியா, எரித்ரியா ஆகிய நாடுகள் 40வீத கோதுமையையும் லெபனான் 60 வீத கோதுமையையும் யுக்ரேனிடமிருந்து பெறுகின்றன. ஆனால், இந்த பற்றாக்குறையின் வலி உலகம் முழுவதும் உணரக்கூடியதாக உள்ளது. ரஷ்ய படையெடுப்புக்குப் பின் கோதுமை விலை மூன்றில் ஒரு பங்கு உயர்ந்துள்ளது.

இதனை உடனடியாக சரிசெய்ய முடியாது. வழித்தடம் அமைப்பதற்கான ஒப்பந்தம் மற்றும் போதுமான கப்பல்கள் இருந்தாலும், அவை பாதுகாப்பாக வெளியேற கருங்கடலில் உள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும். இதுவொரு கடினமான வழிமுறையாகும்.

லட்சக்கணக்கிலான மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்படும் ஆபத்தில் உள்ளதாக ஏற்கெனவே எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. உலகத்தின் சில பகுதிகளில் சமூக அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

வழித்தடத்தை அமைக்க முடியாவிட்டால் என்ன நடக்கும் என்பதற்கான முன்னோட்டமாக இது இருக்கிறது. பசி வேதனைகள் மற்றும் நீட்டிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டங்கள் நீண்டகால பொருளாதார, சமூக நெருக்கடியாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

யுக்ரேனிலிருந்து ரயில்கள் மற்றும் டிரக்குகள் மூலமாக வெறும் 20 லட்சம் தொன் தானியங் கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக, ஒகொன்ஜோ-இவேலா தெரிவித்துள் ளார். இந்த பிரச்னைக்கு "விடை தேடுவது மிகவும் முக்கி யமானது" என அவர் தெரிவித்தார்.



ஐநா பொதுச் செயலாளர் ஆண்டோனியோ குட்டரஸ் இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக நடவடிக்கைக் குழு ஒன்றை அமைத்துள்ளதாக கூறினார்.

"இதுதொடர்பாக ஏற்பாடுகள் ஏதும் செய்யப்பட முடியுமா என்பது குறித்து ரஷ்யாவுடன் இணைந்து பணியாற்ற நீண்ட நேரத்தை அவர் செலவிட்டார்," என அவர் கூறினார்.

இது தொடர்பாக ஒப்பந்தம் ஏதும் உருவாகாவிட்டால், "உலக அளவில் பயங்கரமான சூழலாக இது மாறும்," என அவர் தெரிவித்தார்.

கருங்கடல் பிராந்தியத்திலிருந்து ஆப்பிரிக்காவில் உள்ள 35 நாடுகள் உணவுப்பொருட்கள் இறக்குமதி செய்வதாகவும் 22 நாடுகள் உரங்களை இறக்குமதி செய்வதாகவும் அவர் கூறினார்.

"இது என்ன மாதிரியான பெரிய தாக்கங்களை, குறிப்பாக ஆப்பிரிக்க கண்டத்தில் ஏற்படுத்தும் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்" என அவர் தெரிவித்தார். "அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நாம் மோசமான உணவு நெருக்கடிக்குள் செல்ல மாட்டோம் என நான் நம்புகிறேன்" என அவர் கூறினார்.

தற்போது அந்த பிராந்தியத்திலிருந்து தானியங்கள் ஏற்றுமதி செய்யப்பட முடியாது என தெரிவித்த அவர், ஜூலை மாதத்தில் அறுவடை காலம் வருவதாக தெரிவித்தார். "இதனால் ஏற்கெனவே வீணான உணவுப்பொருட்களை ஒத்த அளவுக்கு தானியங்கள் வீணாகிவிடும், எனவே அடுத்த ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு இந் நிலைமை நீடிக்கலாம். இது உலகின் சில பகுதிகளுக்கு உண்மையில் பேரழிவை ஏற்படுத்தும்" என்றார் அவர்.

கொரோனா தொற்று, தொழி லாளர் பற்றாக்குறை ஆகியவையும் விநியோக சங்கிலி இடையூறுகளை மோசமாக்குகின்றன என்றார்.

மேலும் உணவுப்பொருட்க ளுக்கான ஏற்றுமதி கட்டுப்பாடு களை தளர்த்த வேண்டும் என அவர் உலக நாடு களின் தலைவர்களை கேட்டுக் கொண்டார்.

**- டாம் எஸ்பினெர் (பிபிசி)**

# பொருளாதார நெருக்கடி மத்தியில் விளிம்புநிலை மக்களின் எதிர்காலம்?

சுகன்யா காண்டீபன்
(வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி)

நாட்டின் நெருக்கடி மத்தியதர வர்க்கத்தினரையே தெருவில் இறங்கி போராடும் நிலைக்கு தள்ளியுள்ள போது வளங்களும் வாய்ப்புக்களும் மட்டுப்படுத்தப்பட்ட அன்றாடம் கூலி வேலை செய்யும் விளிம்பு நிலை மக்களின் நிலை என்ன? அவர்களின் தேவைகளுக்கான தீர்வுகள் என்ன?

### மக்களின் தேவைகள்

கிளிநொச்சியில் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி மலையகத்திலிருந்தும், யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்தும் இடம் பெயர்ந்து அங்கு வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை பலப்படுத்தும் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் கடந்த ஒரு வருடமாக ஈடுபட்டு வருகிறேன். பல கலந்துரையாடல்களை இந்த குழுக்களில் உள்ள பெண்களுடன் செய்துள்ளேன். ஆனால், கடந்தவாரம் அவர்களைச் சந்தித்தபோது பொருளாதார நெருக்கடியால் அனுபவிக்கும் சிரமங்களைப் பற்றியே அதிகளவில் கூறிக் கொண்டிருந்தார்கள்.

குறிப்பாக "அரிசி, பருப்பு, சீனி தருவீர்களா? அதுதான் இப்ப தேவைப்படுது. ஒரு வேளை காலை உணவுக்கே 500 ரூபா வேணும். ஒருநாள் முழுவதும் தோட்டத்தில் புல்லு பிடுங்கினாலும் 1000 ரூபாதான் கிடைக்குது. அந்த வேலைகூட குறைவாகதான் இருக்கிது. 1,000 ரூபாவாக இருந்த சீமெந்து இப்ப 2,850 ரூபா ஆகிட்டுது. எங்களுக்கு வேலை இல்லை. நாலு பேருக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கே 3,000 ரூபா தான் சமுர்த்தியால தருவாங்கள். அதுவும் ஒழுங்காக கிடைக்கிறதில்ல. நாங்கள் இப்ப கடன்களை எடுத்தும் சிறிய நகைகளை அடகுவைத்தும்தான் சமாளிக்கிறம். இன்னும் எத்தனை நாளுக்கு நாங்கள் இப்பிடி சமாளிப்பது?" என்று அவர்கள் என்னுடன் பகிர்ந்துகொண்ட விடயங்கள் எனக்குள் பல கேள்விகளை எழுப்பியது.

ஒருபுறம் கொழும்பில் நடக்கும் போராட்டங்களும் அதனுடன் கூடிய அரசியல் மாற்றங்களை வலியுறுத்தும் கோசங்களும். மறுபுறம் அடுத்தவேளை உணவுக்குகூட திண்டாடும் மக்கள். இரண்டுமே போராட்டம்தான், ஆயினும் எதற்கு முன்னுரிமை கொடுப்பது?

இந்த நெருக்கடி அனைத்து மட்டங்களில் உள்ள மக்களையும் பாதிக்கின்ற போதிலும் குறிப்பாக நாட்கூலி வேலை செய்வோரை முதலில் பாதிக்கின்றது. காரணம் அவர்களுக்குச் சொத்துக்களோ வளங்களோ மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கிறது. அதிலும் குறிப்பாக சமூக புறந்தள்ளல்களுக்கு உட்படும் மக்களுக்கு நாட்டின் பொருளாதாரம் நன்றாக இருந்தபோதே வாழ்வாதாரத்தை முன்கொண்டு போவதற்கு பல சிக்கல்கள் இருந்தது. தற்போது அது இன்னும் மோசமாகி வருகிறது.

### சமூகபொருளாதார பின்னணி

இவர்களுக்கு கால் ஏக்கர் அல்லது அரை ஏக்கர் பெமிட் காணிகளே இருக்கின்றன. சிலருக்கு இன்னும் பெமிட் வழங்கப்படவில்லை. விவசாயத்திற்குப் போதுமான காணிகளோ பெரிய குளங்களில் இருந்து நீர்ப்பாசனத்தைப் பெறுவதற்கான வாய்ப்புக்களோ இல்லை. கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தங்களால் அவர்கள் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து இருந்த சிறிய சொத்துக்களையும் இழந்தனர்.



யுத்தம் நிறைவடைந்த பின்னரும்கூட வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பொருத்தமான உதவிகள் கிடைக்கவில்லை. அரச வர்த்தக வங்கிகள்கூட அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லது சொத்துக்கள் பிணையாக கொண்டிருப்பவர்களுக்கு மட்டுமே தமது கடன் சேவைகளை வழங்கியதால் நியாயமான வட்டிவீதத்தில் நிதித்தேவையை பூர்த்தி செய்தற்கான வாய்ப்புகளும் இல்லாமல் இருந்தது. அந்த நிலை தனியார் நுண்நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் நாள் கடன், கிழமைக்கடன்களை அணுகுவதற்கு அவர்களைத் தள்ளியது.

இக்கடன்களின் அதிகூடிய வட்டி வீதமும் அறவீடுகளின் போதான முறைகேடுகளும் இவர்களை கடன்பொறிக்குள் சிக்க வைத்த தோடு பல குடும்ப பிரச்சினைகளையும் உருவாகவும் தற்கொலைகள் ஏற்படவும் வழிவகுத்தது. மிகவும் மோசமான அந்த நிலையிலிருந்து அவர்கள் தம்மை ஓரளவாவது விடுவித்துக் கொள் வதற்கு பல வருடங்கள் எடுத்தது.

தற்போது பெரும்பாலான ஆண்கள் தோட்டங்களிலும் கட்டுமான பணிகளிலும் கூலித் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். சிலர் சிறிய அளவில் குத்தகை காணிகளில் விவசாயம் செய்கிறார்கள். பெண்கள் வீட் டில் இருந்து தமது பிள்ளைகளை பராமரிப்பது டன் கோழி, ஆடு, மாடு வளர் தலிலும் தையல் வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள்.

குடும்பங்களின் பொருளாதார சூழ்நிலை காரணமாக உயர்கல்வியை தொடர முடியாத இளம் தலைமுறையினரும் வீட்டில் தமது பிள்ளைகளை பராமரிப்பதற்கான உதவி கிடைக்கும் பெண்களும் ஆடைத் தொழிற்சாலைகளுக்கும் கண்ணிவெடி அகற்றும் வேலைகளுக்கும் செல்கிறார்கள்.

### நெருக்கடி ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்

சீமெந்தின் விலை அதிகரிப்புடன் பெருமளவிலான மேசன் கூலித்தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். விவசாயத்திற்குத் தேவையான உரங்கள், கிருமிநாசினிகள் இல்லாததால் கடந்த போகத்தில் விளைச்சல்கள் அரைவாசியாக குறைந்தது. அதை அனுபவமாகக் கொண்டு இந்த போகம் விவசாய செய்கையை குறைத்துள்ளார்கள். இதனால் தோட்டங்களிலும் கூலிவேலைகள் மிக குறைவாகவே கிடைக்கிறது. ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை புரிபவர்களுக்கு மாதாந்தம் நிலையான வருமானம் கிடைத்தாலும் தற்போது சடுதியாக அதிகரித்து செல்லும் பொருட்களின் விலையேற்றங்களால் குடும்ப செலவுகளை ஈடுசெய்ய முடியவில்லை.

கடன்திட்டங்கள் ஊடாகவோ நீண்ட காலத்தில் பயன்தரும் திட்டங்களுக் கூடாகவோ உடனடியாக தேவைப்படும் உணவுதேவையை பூர்த்திசெய்ய முடியாது. விவசாயிகள் விவசாயத்தின் அளவை குறைத்தது உணவுப் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்துகிறது. எதிர்காலத்தில் கடுமையான போஷாக்கு பிரச்சினைகள் உருவாகலாம். போஷாக்கு குறைபாடுள்ள தலைமுறையால் சமூக பொருளாதாரம் பின்னடைவாகவே தொடர்ந்தும் இருக்கும்நிலை உருவாகலாம்.



மேலும் உணவை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் தம்மிடமுள்ள சிறிய சொத்துக்களைக்கூட இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுவது அவர்களின் எதிர்காலத்தை ஸ்திரமற்றதாக்கும். இந்த நிலை உருவாகும்வரை விட்டுவிட்டு பின்பு வாழ்வாதார திட்டங்கள் என்ற பெயரில் ஆடு, மாடு, கோழிகளை கொடுப்பதால் அவர்களது வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது. யுத்தத்திற்கு பின்னரும்கூட இப்படியான ஒரு நிலைதான் இருந்தது.

எந்தவிதமான சொத்துக்களோ நிரந்தர வருமானமோ இல்லாத மக்கள் வேறுவழியில்லாமல் நுண்நிதிக் கடன்களைப் பெற்றார்கள். தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியும் அதே நிலைக்கு மக்களை இட்டுச்செல்கிறது. அவர்கள் முழுமையாக கடன்பொறிக்குள் சிக்குவதற்கு முன்பு கடந்தகால அனுபவத்தை படிப்பினையாக கொண்டு விரைந்து தீர்வுகளை தேடவேண்டும்.

### மாற்றுத்தீர்வுகள்

அரசியல் பொருளாதார மாற்றங்களுக்கூடாக எதிர்பார்க்கப்படும் தீர்வுகள் நடைபெறுவதற்கு குறிப்பிட்ட காலம் தேவைப்படும். அதற்கிடையில் பல விடயங்கள் நடந்துமுடிந்துவிடும். பசி கண்களுக்கு புலப்படுவதில்லை என்பதால் இல்லை என்று கூறிவிட முடியாது. தினமும் அதற்கான தேவை உள்ளது. அதனால் சமூகத்தில் ஏற்படுத்தப்படும் தாக்கம் ஆழமானது என்பதை விளங்கிக்கொண்டாலும் கூட அதை நாம் கலந்துரையாடல்களுக்குள் கொண்டுவருவது மிக குறைவாகவே இருக்கிறது. அது அரசாங்கத்தின் கடமை என்றுகூறி அப்படியே விட்டு விடுகிறோம். இது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல சக மனிதர்களாக, சமூக அமைப்புகளாக நம் எல்லோரது கடமையும்கூட.

விவசாய திணைக்கழங்கள் விவசாயத்திற்குத் தேவையான உள்ளீடுகளை முன்னுரிமைப்படுத்தி இறக்குமதி செய்தற்கான அழுத்தங்களை வழங்குவதன் ஊடாகவோ அல்லது தொண்டு நிறுவனங்களிடம் உதவிகளை பெறுவதன் ஊடாகவோ தன்நிறைவுப் பொருளாதாரத்திற்கான வழிவகைகளை செய்வதுடன். பசளைகள் உரங்கள் அதிகளவில் தேவைப்படாத கிழங்கு வகைகள் மற்றும் தானியங்களின் செய்கையை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்க வேண்டும்.

தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகநிறுவனங்கள் தங்களது அமைப்புகளுக்கூடாக செய்யும் வேலைத்திட்டங்களில் உணவுப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை கொடுக்கும் திட்டங்களுக்கு முன்னரிமை கொடுக்க வேண்டும். புலம்பெயர் அமைப்புகளிடமும் நன்கொடையாளர்களிடமும் இருந்து உதவிகளை பெற்று உணவு வங்கிகளையும் பசியால் வாடும் குடும்பங்களை இனங்கண்டு நேரடியாக உணவு விநியோகங்களை செய்யும் நிலையங்களையும் உருவாக்க முன்வரவேண்டும்.

இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமிய சமய நிறுவனங்கள் இன, மத பேதங்களைக் கடந்து மக்களுக்கு உதவ முன்வர வேண்டும். குறிப்பாக செல்வச்சந்நிதி, நயினாதீவு போன்ற ஆலையங்கள் அன்னதான பணிகளை செய்துவருகின்றன. அதேபோல நல்லூர் போன்ற பெரிய சமய நிறுவனங்களும் தம்மிடமுள்ள பெருமளவிலான சொத்துக்களில் குறிப்பிட்ட அளவையாவது மக்களின் தேவைகளுக்கு பயன்படுத்துவது அவசியமாகும்.

தனி மனிதர்களாக எங்களால் எல்லோருக்கும் எப்போதும் உதவ முடியாது என்றாலும்கூட எங்களுக்கு முன்னால் இருக்கும் ஒருவரின் ஒருநேர பசியை போக்க முடியுமாக இருந்தால் அதுகூட இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சிறிய பங்களிப்பாக இருக்கும். (மாற்றம்)


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


Kalvi tv CHANNEL


- 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.






(1)



(2)



(3)

02.




(1)


(2)


(3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.


A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. "பல்கலைக்கழகம்" எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.


(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.


(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை

(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3) 

02. (1) 

03. (3) C, F / B, D / A, E

---

Kalvi tv CHANNEL-1

**11.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

Kalvi tv CHANNEL - 2

**11.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பெரியநீலாவணையில் சைக்கிள்கள் திருட்டு!



அம்பாறை, ஜூன். 11

சைக்கிள்கள் திருட்டு தொடர்பில் அவதானம் செலுத்துமாறு பொதுமக்களை பெரியநீலாவணை பொலிஸார் கேட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக சைக்கிள்கள் திருடப்படுவதாக முறைப்பாடுகள் சில கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து பெரிய நீலாவணை பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன் போது சந்தேகத்தின் பேரில் ஆண், பெண், சந்தேக நபர்கள் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் பிரதான சந்தேக நபர் தலைமைறைவாகி உள்ள நிலையில் பாண்டிருப்பு மற்றும் துறைநீலாவணை பகுதிகளில் களவாடப்பட்ட பல சைக்கிள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

எனவே திருடப்பட்ட சைக்கிள்களை கொள்வனவு செய்து உடைமையில் வைத்திருப்பவர்கள் உடனடியாக பொலிஸாரை அணுகி ஒப்ப டைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் பெரிய நீலாவணைக்குட்பட்ட பொலிஸ் பிரிவுகளான மருதமுனை, பெரிய நீலாவணை ,பாண்டிருப்பு, உள்ளிட்ட பகுதிகளில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்களின் சைக்கிள்கள் பல களவாடப்பட்டிருந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலால் வழிநடத்தலில் பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான டி.டினேஸ் தலைமையிலான குற்றத் தடுப்பு பிரிவினர் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை தேடி கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆலங்குளம் வைத்தியசாலை வியாழனன்று மீண்டும் திறப்பு

## 24 மணி நேரமும் சேவை வழங்க ஏற்பாடு

அம்பாறை, ஜூன். 11

**கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ள ஆலங்குளம் ஆரம்ப வைத்தியசாலை நேற்று முன் தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.**



அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவிலுள்ள இவ்வைத்தியசாலை 1994ஆம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு, இயங்கி வந்த நிலையில் கடந்த சில வருடங்களாக புனரமைப்போ அடிப்படை வசதிகளோ எதுவுமில்லாமல் இருந்தமையால் மருத்துவ சேவையின்றி, கைவிடப்பட்டிருந்தது.

இதனால் இப்பகுதி மக்கள் தமது மருத்துவ தேவைகளுக்காக நீண்ட தூரம் பயணம் செய்து, வெளியூர் வைத்தியசாலைகளுக்கே செல்ல வேண்டியிருந்தது.

இந்நிலையில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை எடுத்துக் கொண்ட அயராத முயற்சி காரணமாக சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் இந்த வைத்தியசாலை அனைத்து அடிப்படை வசதிகளுடனும் துரிதமாக புனரமைப்பு செய்யப்பட்டு, மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

இங்கு 24 மணி நேரமும் மருத்துவ சேவை இடம்பெறும் எனவும் இதனால் இப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2000 குடும்பத்தினர் பயனடைவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.ஏ.எம்.முபாரிஸ் தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழாவில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வைத்தியசாலையின் சேவைகளை ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம்.ஐ.எம்.தொளபீக், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம்.றிபாஸ், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எம்.எம்.வாஜித், திட்டமிடல் வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.சி.எம்.மாஹிர், மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வி.ரி.சர்மா, பொறியியலாளர் எம்.எம்.எம்.ஹக்கீம் உள்ளிட்டோரும் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இவ்வைத்தியசாலையினால் முன்னெடுக்கப்படவேண்டிய மருத்துவ சேவைகள், அதற்காக ஏற்படுத்தப்படவேண்டிய மேலதிக வசதிகள், தேவையான மருத்துவ உபகரணங்களை தருவித்தல் மற்றும் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடலும் இடம்பெற்றது. (அ)

# பதுக்கி வைக்கப்பட்ட அரிசி பழைய விலையில் விற்பனை



அம்பாறை, ஜூன். 11

பதுக்கி வைக்கப்பட்டுள்ள அரிசி தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக் கமைய நுகர்வோர் பாது காப்பு அதிகாரிகள் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு பழைய விலைக்கு பொதுமக்களுக்கு அரிசியைப் பெற்றுக் கொடுத்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

அம்பாறை, கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட மருதமுனை பகுதியில் அரிசி பதுக்கல் இடம்பெறுவதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது.

இதற்கமைய அவ்விடத்துக்கு சென்ற நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் குழு, அரிசி பதுக்கல் இடம் பெற்றதாக அடையாளம் காணப்பட்ட கடைக்கு சென்று விசாரணை மேற்கொண்டதுடன் பழைய விலைக்கு அரிசியைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

மருதமுனை பகுதியில் குறித்த கடைக்கு பொதுமக்களே உடனே விரையுங்கள். குறைந்த விலையில் அரிசியை பெறுங்கள். நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளும் உள்ளனர் என அப்பகுதியில் உள்ள பள்ளிவாசலின் ஒலிபெருக்கியிலும் அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு அதிகளவான மக்கள் சென்று அரிசியை கொள்வனவு செய்து சென்றதை அவதானிக்க முடிந்தது. (அ)

# 17 வயது சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேக நபர் விளக்கமறியலில்

திருமலை, ஜூன் 11

திருகோணமலை மாவட்டத்தின் நாமல்வத்த பகுதியில், சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதவான் தர்ஷினி அண்ணாத்துரை முன்னிலையில், குறித்த சந்தேக நபரை முன்னிறுத்தியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் அதே பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவர். அவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

குடும்பத்தகராறு காரணமாக மதுபோதையில் மனைவியைத் தாக்கியமையால் மனைவி காயம் ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் பக்கத்து வீட்டுச் 17 வயதுடைய சிறுமியை வீட்டுக்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் மேற்கொண்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (அ)

# மூன்றாவது நாளாக நேற்றும் கல்முனையில் கழிவகற்றல்

கல்முனை, ஜூன். 11

குப்பைகள், விலங்குகழிவுகள் கொட்டப்பட்ட மற்றும் சல்பீனியாக்கள் நிறைந்த கல்முனை சாய்ந்தமருது வண்ட் வீதியில் அமைந்துள்ள நீரோடையைச் சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கல்முனை மாநகர சபை ஆகியன இணைந்து முன்னெடுக்கப்பட்டன.

இந்த பணியில் கல்முனை பிரதேச நீர்ப்பாசன காரியாலய பொறியியலாளர் என்.புவிரஞ்சினி, கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்தியதிகாரி மருத்துவர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர், நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியல் உதவியாளர் எம்.ஐ.எம். அமீன், நீர்ப்பாசனத் திணைக்கள தொழிநுட்ப உதவியாளர் ஈ.எம். ஜெயபோசன், மாநகர சுகாதாரப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி யூ.எம். இசாக், சுகாதார மேற்பார்வையாளர் அதுஹம் , சுகாதார ஊழியர்கள், வாகனச் சாரதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு நீரோடையை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர். (அ)



# அமெரிக்காவில் தொடரும் துப்பாக்கி வன்முறைகள்!

## மேரிலாண்டில் மூவர் சுட்டுக் கொலை




நியூயோர்க், ஜுன். 11

அமெரிக்கா - மேரிலாண்ட் மாகாணத்தில் உள்ள கொன்கிரீட் உபகரண உற்பத்தி தொழிற்சாலை ஒன்றுக்குள் புகுந்து ஆயுததாரி ஒருவர் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டதில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மேரிலாண்ட் பாதுகாப்பு தரப்பினருக்கும் - சந்தேகநபருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் துப்பாக்கிதாரி காயமடைந்தார். பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்த இருவரும் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வொஷிங்டன் கவுண்டி ஷெரிப் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து சமூகத்திற்கு எந்தவொரு தீவிர அச்சுறுத்தலும் இல்லை எனவும் செய்தித் தொடர்பாளர் கூறினார். எனினும் சம்பவத்தின் பின்னணிகளை விவரிக்க அவர் மறுத்துவிட்டார்.

அமெரிக்காவின் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் துப்பாக்கி வன்முறைகளின் மிகச் சமீபத்தியதாக இச்சம்பவம் பதிவாகியுள்ளது.

துப்பாக்கிச் சூடு இடம் பெற்ற நிறுவனம் 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு கொன்கிரீட் உற்பத்தி உபகரணங்களை வழங்குகிறது.

கடந்த மாத இறுதியில், டெக்சாஸின் உவால்டேயில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளியில் 18 வயது இளைஞன் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 19 சிறுவர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் இடம் பெற்ற சில நாட்களில் ஒக்லஹோமாவின் துல்சாவில் உள்ள ஒரு மருத்துவ மைய கட்டடத்துக்குள் புகுந்து ஆயுததாரி ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

விஸ்கொன்சின் மாகாணத்தின் மிகப்பெரிய நகரான மில்வாக்கிக்கு தெற்கே உள்ள பகுதியில் இறுதிச் சடங்கொன்றின் போது கடந்த வாரம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்தனர்.

புளோரிடா மாகாணத்தில் இரண்டு வயதுக் குழந்தை தவறுதலாக கைத்துப்பாக்கியை அழுத்தியதால் குண்டு பாய்ந்து தந்தை உயிரிழந்த விபரீத சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

அமெரிக்காவில் இவ்வாறு துப்பாக்கி வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் கைத்துப்பாக்கி சட்டங்களை கடுமையாக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்ய ஜனாதிபதி, பிரதமருக்கு தடை விதித்த உக்ரைன் அரசு!

கீவ், ஜுன்.11

**ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், பிரதமர் மைக்கேல் மிஷஸ்டின் உள்ளிட்ட 35 ரஷ்ய உயரதிகாரிகளுக்கு தடை விதித்து உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி உத்தரவிட்டுள்ளார்.**



ரஷ்ய ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட 35 உயரதிகாரிகளுக்கு தடை விதிக்கும் ஆணையில் ஜெலென்ஸ்கி கையெழுத்திட்டார்.

அத்துடன், ரஷ்யாவின் 236 கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் 261 கல்லூரி தலைவர்கள் மீது தடைகள் விதிக்கப்படுகின்றன என உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதுதவிர, 236 ரஷ்ய உயர் கல்வி மையங்களுடனான கலாசார பரிமாற்றங்கள், அறிவியல் ஒத்துழைப்பு, கல்வி மற்றும் விளையாட்டு தொடர்புகள் மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகள் ஆகியவற்றுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

லொமனோசோவ் மாநில பல்கலைகழகம், பவுமன் மொஸ்கோ மாநில தொழில் நுட்ப பல்கலைகழகம், எச்.எஸ்.இ. பல்கலைகழகம், தேசிய பொருளாதாரம் மற்றும் பொது நிர்வாகத்தின் ரஷ்ய ஜனாதிபதி அக்கடமி மற்றும் செச்சினோவ் மொஸ்கோ மாநில மருத்துவ பல்கலை கழகம் ஆகியவை தடை விதிக்கப்பட்ட பட்டியலில் அடங்கும்.

இந்த தடைகள் காலவரையின்றி அமுலில் இருக்கும் என உக்ரைன் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# சீனாவில் வெள்ளம்!

## ஹூனானில் மட்டும் 17 பேர் பலி!

பீஜிங், ஜுன். 11



மத்திய சீன மாகாணமான ஹூனானில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளப் பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களில் சிக்கி குறைந்தது 17 பேர் உயிரிழந்தனர். நான்கு பேர் காணாமல் போயுள்ளனர்.

இதனைவிட, தன்னாட்சிப் பிராந்தியமாக தெற்கு குவாங்சி யில் பல கிராமங்களின் சில பகுதிகள் மண்சரிவினால் மண்ணில் புதைந்துள்ளன. இங்கு இயற்கை அனர்த்தங்களால் 1.8 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2,86,000 பேர் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்துள்ளனர். 2,700க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றில் சில முற்றிலும் இடிந்து விழுந் துள்ளன என சின்ஹூவா செய் திச் சேவை தெரிவித்துள்ளது.

குவாங்சியில், பெய்லியு நகரின் பல கிராமங்களில் மண் சரிவில் சிக்கி ஏழு பேர் இறந் தது உறுதி செய்யப்பட்டுள் ளது. இயற்கை அனர்த்தங்க ளில் சிக்கி காணாமல் போயுள் ளவர்களை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள் ளனர். அங்கு பல நாட்களாக பெய்த மழையால் மலைப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இங்கு தொடர்ந்து மண்சரிவு கள் ஏற்படக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

குவாங்சி மற்றும் அருகி லுள்ள ஜியாங்சி, புஜியான், குவாங்டாங், ஹைனான், சிச்சுவான், சோங்கிங் மற்றும் யுன்னான் மாகாணங்களில் தொடர்ந்து கனமழை பெய்யும் என்று அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சீனா வழக்கமாக கோடை மாதங்களில் வெள்ளப் பெருக்கை அனுபவிக்கிறது, பெரும்பாலும் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளில் அதிக மழை இந்தப் பகுதிகளில் பெய்வது வாடிக்கையாக உள்ளது.

சீனாவில் கடந்த 1998 இல் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளப் பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால் 2,000 க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். கிட்டத்தட்ட 3 மில்லியன் வீடுகள் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரு தரப்பு உறவு குறித்து ட்ரூடோ - பைடன் பேச்சு!

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜுன். 11

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை நேற்று முன் தினம் சந்தித்துப் பேசினார். இருதரப்பு உறவுகள் குறித்து இரு தலைவர்களும் இதன்போது பேசினர்.

அத்துடன், பிராந்திய மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் கனடா-அமெரிக்க கூட்டாண்மையை ஆழப்படுத்துவதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை இரு தலைவர்களும் மீண்டும் வலியுறுத்தினார்.

உக்ரைனுக்கு எதிரான புடினின் சட்டவிரோத மற்றும் நியாயமற்ற இராணுவ ஆக்கிரமிப்பு, இதனால் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி குறித்தும் இரு நாடுகளின் தலைவர்களும் கவனம் செலுத்தினர். மேலும் உக்ரைன் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தொடர்ந்து ஆதரவளிப்பதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினர்.



பொருளாதார, மனிதாபிமான மற்றும் இராணுவ ரீதியாக உக்ரைனுக்கு தொடர்ந்து உதவ அமெரிக்கா மற்றும் கனடா தலைவர்கள் உறுதியளித்தனர்.

உக்ரைனின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பேணும் வகையில் பங்காளிகள் மற்றும் நட்பு நாடுகளுடன் தொடர்ந்து பணியாற்ற வும் ஜோ பைடன் மற்றும் ஜஸ்ரின் ட்ரூடோ ஆகியோர் உறுதியளித்தனர்.

வட அமெரிக்க கண்டத்தின் பாதுகாப்புக்கான கனடாவின் உறுதிப்பாட்டை பிரதமர் ட்ரூடோ இச்சந்திப்பின்போது வலியுறுத்தினார்.

கனடாவின் 2022 நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு செலவினக் கடமைகளை அவர் கோடிட்டுக் காட்டினார். மேலும் வட அமெரிக்க விண்வெளி பாதுகாப்புக் கட்டளை நவீனமயமாக்கலுக்கான ஆதரவைப் பற்றியும் அவர் பைடனுடன் விவாதித்தார்.

அத்துடன், கனடா - அமெரிக்கா இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை பிரதமரும் ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டனர்.

கனடா-அமெரிக்க கூட்டாண்மையின் தனித்துவம் மற்றும் இரு நாடுகளையும் ஒன்றிணைக்கும் பரந்த மற்றும் ஆழமான மக்களுக்கிடையிலான உறவுகளை இரு தலைவர்களும் சுட்டிக்காட்டியதுடன், அனைவரின் நலனுக்காக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை தொடர்ந்து வலுப்படுத்துவதற்கான பரஸ்பர அர்ப்பணிப்பை வலியுறுத்தினர்.

இதேவேளை, ஜோ பைடனை கனடாவுக்கு வருமாறு பிரதமர் ட்ரூடோ அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பை ஏற்று எதிர்வரும் மாதங்களில் ஜனாதிபதி பைடன் கனடாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் கனேடிய பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)









இந்துக்களின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ். இந்துக் கல்லூரி - கொழும்பு இந்துக் கல்லூரி அணிகள் மோதும் பெருந்துடுப்பாட்டப் போட்டி நேற்று ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை...








வடக்கு நீலங்களின் சமர் என்று அழைக்கப்படும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிகள் மோதும் பெருந்துடுப்பாட்டப் போட்டி நேற்று ஆரம்பமான வேளை....!

# தென்னாபிரிக்காவிடம் வீழ்ந்தது இந்தியா

*புதுடில்லி, ஜூன் 11*

*இந்தியாவுக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது தென்னாபிரிக்க அணி.*

*டில்லியில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 211 ஓட்டங்கள் குவித்தது. இதில், இஷான் கிஷன் 76 ஓட்டங்களும் ஷ்ரேயாஸ் ஐயர் 36 ஓட்டங்களும் பாண்ட்யா 12 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 31 ஓட்டங்களும் எடுத்தார்கள்.*

*தென்னாபிரிக்க அணி, 19.1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 212 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. 11ஆவது ஓவரின் முடிவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 92 ஓட் டங்கள் எடுத்துத் தடுமாறிக் கொண்டிருந்தது தென்னாபிரிக்க அணி.*

*போட்டியின் கடைசிக்கட்டத்தில் மில்லரும் வான் டேர் டுசெனும் அதிரடியாக விளையாடி வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தார்கள். டுசென் 46 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகளுடன் 75 ஓட்டங்களும் மில்லர் 31 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 64 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.*

*இருவரும் 4ஆவது விக்கெட் இழப்புக்கு 131 ஓட்டங்கள் எடுத்தார்கள். ஆட்ட நாயகனாக மில்லர் தெரிவானார்.*

*கடந்த பெப்ரவரி மாதம், இலங்கைக்கு எதிரான 3ஆவது இருபது - 20 போட்டியை வென்ற இந்திய அணி, தொடர்ச்சியாக அதிக இருபது - 20 போட்டிகளில் வென்ற அணி என்ற சாதனையைச் சமன் செய்தது.*

*இலங்கையை வீழ்த்தி, இருபது -20 கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக 12 வெற்றிகளைப் பெற்றது இந்திய அணி. இருபது -20 கிரிக்கெட்டில் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடும் அணிகளில் தொடர்ச்சியாக அதிக வெற்றிகளை பெற்ற ஆப்கானிஸ்தானின் உலக சாதனையை இந்திய அணி சமன் செய்தது. இரு அணிகளும் தொடர்ச்சியாகத் தலா 12 வெற்றிகளைப் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)*



# தமிழர் மீதான அத்துமீறல்கள் நின்றால் பொருளாதார சிக்கலுக்கு நிரந்தர தீர்வு

## கூட்டமைப்பின் சித்தார்த்தன் எம். பி.

கொழும்பு, ஜூன் 11

காணி ஆக்கிரமிப்பு போன்ற அத்துமீறல்களை தமிழர் பகுதியில் தடுத்து நிறுத்த வேண்டும். அவ்வாறு நிறுத்தப்பட்டால் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தர தீர்வுகாண முடியும். இதை அரசாங்கம் உடனடியாக செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். நேற்று அவர் பாராளுமன் றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



மேலும், "பிரதமர் ரணில் விக்ரமசிங்க பேசுகின்ற போது இந்த நாட்டை கட்டி எழுப்புவதற்கான முயற்சியில் முழு நாடும் பங்குதாரர்களாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

எங்களுடைய பகுதியில் அத்துமீறி செய்கின்ற விடயங்களை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் உள்ள காணியை பலவந்தமாக எடுப்பதற்கு கோட்டாபய கடற்படை முகாமில் இருந்து முயற்சிகள் எடுக்கப்பட்டு அது மக்கள் போராட்டத்தால் பின்னுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேபோல யாழ்ப்பாணத்தில் ஊர்காவற்றுறையிலுமா காணி எடுப்பதற்கான முஸ்தீபுகள் காணப்படுகின்றன. இவர்கள், இவ்வாறெல்லாம் செய்து கொண்டிருக்கின்ற போது எப்படி நாங்கள் முழுமையான மனதுடன் இந்த பொருளாதார சிக்கலை தீர்க்க உதவமுடியும்.

புலம்பெயர் தமிழர்கள் இங்குள்ள பொருளாதார நெருக்கடிக்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கை மிகப்பெரிய அளவில் முன்வைக்கப்படுகின்றது. ஜனாதிபதியுடனான சர்வகட்சி மாநாட்டிலும் இது பற்றி பேசப்பட்டது. அப்போதும் நாம் கூறியது ஆகக்குறைந்தது இவ்வாறான அத்துமீறல்களை யாவது தமிழர் பகுதியில் தடுக்க வேண்டுமென்றோம் - என்றும் கூறினார். (ஐ)



# கொடிகாமத்தில் 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல்!

யாழ்ப்பாணம், ஜூன் 11

கொடிகாமம் 52 ஆவது காலாட்படை தலைமையகத்தின் ஒருங்கமைப்பின் கீழ் பொருளாதாரத்தில் பின்தங்கிய 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு 15 ஆவது கஜபா காலாட் படையணி தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் பாதுகாப்பு தலைமையகத்தின் மேஜர் ஜெனரல் செனத் யாப்பா கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கினார்.

ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் 50 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. (அ)

# பவுஸரை வீதியில் நிறுத்திவிட்டு டீசல் விநியோகித்த இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 11

டீசல் ஏற்றிச் சென்ற எரிபொருள் பவுஸரை சீகிரியா - திகம்பதஹ பகுதியில் நிறுத்தி அதிலிருந்து டீசலை விநியோகித்த சம்பவம் தொடர்பில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் டீசலை ஏற்றிச் சென்ற எரிபொருள் பவுஸரின் சாரதி மற்றும் அவரது உதவியாளரே கைதாகினர்.

இதன்போது, எரிபொருள் தாங்கியில் இருந்து விநியோகிக்கப்பட்ட 210 லீற்றர் டீசல் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# தமிழ் மக்களை புறந்தள்ளியதால் நாடு முன்னேறாமல் படுகுழியில்!

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 11

"மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள், தமிழ் மக்களைப் புறந்தள்ளி ஆட்சி நடத்தியமையால்தான் நாடு இன்று முன்னேறாமல் படுகுழியில் வீழ்ந்துள்ளது. இதைத் தற்போதைய அரசு கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீன உறுப்பினராகச் செயற்படும் கொழும்பு மாவட்ட எம்.பியும் 43ஆம் படையணியின் தலைவருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு நான் ஆதரவு வழங்க மாட்டேன். அதேவேளை, இந்த அரசை வீழ்த்தும் சதி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கவும் மாட்டேன்.

பாராளுமன்றில் நான் தொடர்ந்தும் சுயாதீன உறுப்பினராகவே இருப்பேன். ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளில் அதிருப்தி இருந்தமையால்தான் நான் அதிலிருந்து விலகி சுயாதீன உறுப்பினராகச் செயற்படுகின்றேன்.

மக்களின் நன்மை கருதி அரசு முன்னெடுக்கும் செயற்றிட்டங்களுக்கு மாத்திரம் வெளியில் இருந்து ஆதரவு வழங்குவேன்.

எனது எதிர்கால இலக்கு தொடர்பில் இப்போது நான் சொல்லமாட்டேன். தமிழ் மக்களையும் அரவணைத்துக்கொண்டே நான் பயணிப்பேன். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள், தமிழ் மக்களைப் புறந்தள்ளி ஆட்சி நடத்தியமையால்தான் நாடு இன்று முன்னேறாமல் படுகுழியில் வீழ்ந்துள்ளது. இதைத் தற்போதைய அரசு கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும்-என்றார். (அ)


# வீட்டுத் தோட்டம் செய்வோம்

வளம் கொழிக்கும் பூமி என
வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்
பெயர் பொறித்த நம் தாய்நாடு.
இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்
உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.
மூன்று வேளை உணவு இருவேளையாகவும்
ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.
பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே
நிழலாடுகின்றன...!



போதும்...! ஏந்திய கைகள்
சற்றே உயரட்டும்

நாம் வாழப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!
வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்
நமது பசியை நாமே போக்க...
எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!
பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு
போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!
திட்டமிடலும் உழைப்புமே
நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!

www.dantv.tv
ஈழநாடு Eelanadu

## யாழ். இந்துக்...

பாட்டப் போட்டி நேற்று ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி, களமிறங்கிய யாழ். இந்து அணிக்கு அர்ஜன், ராகுல் டிராவிட் தொடக்கம் கொடுத்தனர். தொடக்க வீரரான டிராவிட் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சாம்சன் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தவே, அவருக்கு உறுதுணையாக அர்ஜன் நின்றார். 50 பந்துகளை சந்தித்த அர்ஜன் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து வந்த யாழ். இந்துவின் வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை.

இந்நிலையில் அரைச்சதம் கடந்த சாம்சன் 93 பந்துகளில் 14 பௌண்ட்ரிகளுடன் 77 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும், 9ஆவது விக்கெட்டுக்காக இணைந்த பிரியந்தன், கிருசாந்த் இணை அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 82 பந்துகளில் 58 ஓட்டங்களை எடுத்த பிரியந்தன் ரன் அவுட் ஆகவே, அடுத்து வந்த பரத்துவாசன் ஓட்டம் எதையும் பெறாமலே பெவிலியன் திரும்பினார்.

யாழ். இந்து அணி 59.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 230 ஓட்டங்களை எடுத்தது. கிருசாந்த் கடைசிவரை ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

கொழும்பு இந்துக் கல்லூரியின் பந்துவீச்சில் சகிதிரன் 5 விக்கெட்களையும் சதுர்சன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரிக்கு டிலுக்சன், நிருபன் தொடக்கம் கொடுத்தனர்.

நிருபன் 6, அடுத்து வந்த உஷாந்த் 4, மிதுசிகன் 11 என ஆட்டமிழக்கவே கொழும்பு இந்துக் கல்லூரி தடுமாற ஆரம்பித்தது. எனினும், நான்காவது விக்கெட்டுக்காக டிலுக்சனுடன் இணைந்த சகிதரன் அபாரமான இணைப்பை ஏற்படுத்தினார்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது 28 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்களை இழந்த கொழும்பு இந்துக் கல்லூரி 81 ஓட்டங்களை எடுத்திருந்தது.

டிலுக்சன் 34 ஓட்டங்களுடனும், சகிதிரன் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

யாழ். இந்துக் கல்லூரியின் பந்துவீச்சில் பரத்துவாசன் 2 விக்கெட்களையும் கஜாந் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இன்று போட்டியின் இரண்டாம் மற்றும் கடைசி நாள் ஆட்டமாகும். (ஐ)

(போட்டியின் படங்கள் பக்கம் 9இல்)

## குருந்தூர்மலை...

குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் கோயில் அமைந்துள்ள பகுதியில் பௌத்த தொல்லியல் எச்சங்கள் உள்ளன எனத் தெரிவித்து தொல்பொருள் திணைக்களத்தின் ஆளுகைக்குள் எடுக்கப்பட்டது. இதையடுத்து, அந்தப் பகுதியில் பழமையான தோற்றத்தில் - அந்தக் கால வடிவமைப்புடன் விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அத்துடன், அந்தப் பகுதிக்குள் தமிழ் மக்கள் செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தவிர, அந்தப் பகுதியை சூழவுள்ள 400 ஏக்கர் நிலத்தை விகாரைக்குரிய காணியாக அறிவிக்குமாறு அரசாங்கத்திடம் அந்த விகாரையின் பிக்கு கோரிக்கை வைத்திருந்தார். இந்தக் காணியில் தமிழர்கள் பாரம்பரியமாக விவசாயம் செய்துவரும் காணிகளும் அடங்குகின்றன.

இந்நிலையில், இராணுவ ஒத்தாசையுடன் அமைக்கப்பட்ட விகாரை முழுமையடைந்துள்ளது. இந்நிலையில், புத்தர் பிரானை ஸ்தாபிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் நூற்றுக்கணக்கான இராணுவத்தினரின் பங்களிப்புடன் இரவு - பகலாக முன்னெடுக்கப்படுகின்றன. புத்தர் பிரானை நிறுவும் நிகழ்வில் பங்கேற்க அரச, இராணுவ உயர் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், பெருமளவிலான பிக்குகள், பௌத்த மக்கள் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதேசமயம், குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டு வரும் விகாரை நீதிமன்ற கட்டளைக்கு மாறானது. இதற்கு இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட வேண்டும் என்று கோரி தமிழ் மக்கள் சார்பில் சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். எனினும், இன்றுவரை நீதிமன்றால் தடை உத்தரவோ அல்லது வேறு கட்டளைகளோ பிறப்பிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சகோதரர்...

மேலும் அறிய வருவதாவது,

கடந்த வாரம் மன்னார் - உயிலங்குளத்தில் மாட்டு வண்டி சவாரி ஒன்று இடம்பெற்றது. இதில் இரு தரப்பாரிடையே தர்க்கம் ஏற்பட்டது. இந்தத் தர்க்கத்தில், கொல்லப்பட்ட சகோதரர்களின் நொச்சிக்குளத்தை சேர்ந்த உறவினர் ஒருவரும் சம்பந்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நொச்சிக்குளத்தை சேர்ந்த கொல்லப்பட்டவர்களின் உறவினர் நேற்றுக் காலை மாடு கட்டச் சென்ற போது, இவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்ட மற்றத் தரப்பினர் இவர் மீது தாக்குதலை நடத்தினர்.

காயமடைந்த நபர் வீதிக்கு ஓடிய நிலையில் அவரை மீட்ட சிலர் காயமடைந்தவரை மருத்துவமனையில் சேர்த்தனர்.

இந்தச் சம்பவத்தை அறிந்த உயிலங்குளத்தை சேர்ந்த இரு சகோதரர்களும் மோட்டார் சைக்கிளில் நொச்சிக்குளத்துக்கு சென்றுள்ளனர். அவர்களை வாள்வெட்டு குழுவினர் வீதியில் வைத்து மறித்துள்ளனர். தொடர்ந்து இரு சாரரும் பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் திடீரென சகோதரர்கள்மீது பேசியவர்கள் வாள்வெட்டு தாக்குதலை நடத்தியுள்ளனர். அவர்கள் அங்கிருந்து ஓடியநிலையில், துரத்திச் சென்று வாள்வெட்டு நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதில், இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்நிலையில், அவர்களை மீட்கச் சென்றவர்கள்மீதும் வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில், இருவர் படுகாயங்களுக்கு இலக்காகி மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அறிய வருகின்றது.

இந்தச் சம்பவம் மன்னாரில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## தொழில்நுட்பம்,...

தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தம்மிக்க பெரேராவிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷ பதவி விலகியதை அடுத்து, குறித்த வெற்றிடத்துக்கு தம்மிக்க பெரேரா நியமிக்கப்படவுள்ளதாகவும் அவருக்கு புதிய அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சுப் பதவியைப் பெறுவதற்காக தம்மிக்க பெரேரா, பல்வேறு நிறுவனங்களில் தான் வைத்துள்ள பங்குகளை தனது குடும்ப உறுப்பினர்களின் பெயருக்கு மாற்றுவதற்கு உறுதியளித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, மகளிர், சிறுவர் விவகார அமைச்சு பவித்ரா வன்னியாராச்சிக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (அ)

# புதையல் தோண்ட முயன்ற 7 பேர் கோப்பாயில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 11

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உள்பட்ட இருபாலையில் வீடொன்றில் தங்கம் புதைக்கப்பட்டுள்ள இடம் என்று கூறி அதனைத் தோண்ட முற்பட்ட 7 பேர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த 6 பேரும் இவ்வாறு நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டின் வளாகத்தில் பல கோடி ரூபாய் பெறுமதியான தங்கத் தகடு புதைத்து வைத்துள்ளதாகத் தெரிவித்து அதனை தோண்டி எடுக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டனரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து வெடிமருந்து மற்றும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மின் பயன்பாடு அற்ற டெட்டினேற்றர்கள், மின் டெட்டினேற்றர்கள், யூரியா, யூரியாவை வெடிமருந்தாக மாற்றும் ஜெல், கொங்கிறீட் உடைக்கும் உபகரணங்கள் என்பன அவற்றில் அடங்குகின்றன.

பதுளை, மகரகம, அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 6 சந்தேக நபர்களும் புதையல் தோண்டும் பல வேறு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் ஏழு பேரும் விசாரணைகளின் பின் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் திலீப் என் லியனகேயின் கீழ் உள்ள தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ஐ-3)

## திங்களன்று...

டுள்ளது. இதற்கமைய எதிர்வரும் 13 ஆம் திகதி அரச ஊழியர்கள், பாடசாலைகளுக்கு விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அத்தியாவசிய அரச சேவைகளில் ஈடுபடுவோருக்கு இந்த விடுமுறை பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## எம். பியானார்...

செய்தார். இதையடுத்து வறிதான பதவிக்கே தம்மிக பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற அவர் விரைவில் முதலீட்டு ஊக்குவிப்பு, தொழில்நுட்ப அமைச்சராக பொறுப்பேற்பார் என்று அறிய வருகின்றது. (ஐ)

## முதலீட்டு...

பெண்கள், குழந்தைகள் விவகார அமைச்சின் கீழ், பெண்கள் தேசிய குழு, இலங்கை மகளிர் பணியகம், நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களம், தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம், ஆரம்ப கால குழந்தைப் பருவ மேம்பாட்டுக்கான தேசிய செயலகம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், சௌபாக்யா மேம்பாட்டு பணியகம், தேசிய சமூக வளர்ச்சி நிறுவனம், ஊரக வளர்ச்சி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சமூக பாதுகாப்பு திணைக்களம், ஊனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகம், சமூக சேவைகள் திணைக்களம், முதியவர்களுக்கான தேசிய சபை மற்றும் முதியவர்களுக்கான தேசிய செயலகம், சிறுநீரக நிதியம் என்பன அடங்கும்.

இதேபோன்று, தொழில்நுட்ப அமைச்சின் கீழ், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம், இலங்கை முதலீட்டு சபை, இலங்கை தொலைத்தொடர்பு நிறுவனம், ஆட்பதிவு திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு, இலங்கை தர நிர்ணய நிறுவனம், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனம், கொழும்பு தாமரை கோபுரம், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு, இலங்கை உயிர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம், ரெக்னோ பார்க், நானோ தொழில்நுட்ப நிறுவகம், தகவல் தொழில்நுட்ப பூங்கா (யாழ்ப்பாணம், மன்னார்).

## டெங்குக்கு ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 11

டெங்கு காய்ச்சலால் யாழ். போதனா மருத்துவமனையில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

காக்கைதீவு - ஆனைக்கோட்டையை சேர்ந்த இந்திரராசா - ஜெகதீசன் (வயது-47) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த நபருக்கு கடந்த 7ஆம் திகதி நடுக்கத்துடன் காய்ச்சல் ஏற்பட்டது. இதையடுத்து மறுநாள் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். இரு நாட்களாக அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்ற வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

டெங்கு நோய் தாக்கத்தாலேயே அவர் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேசமயம், முன்னதாக யாழ். மாவட்டத்தில் சிறுவர்கள் இருவர் டெங்கு நோயால் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையில்...

இது முழுமையான மனிதாபிமான அவசரநிலையாக மாறாலம் என நாங்கள் கவலை கொண்டுள்ளோம். இதற்கு தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்று மனிதாபிமான பணிகளை ஒருங்கிணைக்கும் ஐ. நா. அலுவலகப் பேச்சாளர் ஜென்ஸ் லார்கே நேற்றுத் தெரிவித்தார்.

பெருமளவு மக்கள் தற்போது போதிய உணவு இல்லாத நிலையில் உள்ளனர் எனத் தெரிவித்துள்ள அவர் குடும்பங்கள், மருத்துவ சேவைகள், பாதுகாப்பு மற்றும் சிறுவர் கல்வியை பெறுவதும் கேள்விக்குறியாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

## போராட்டக்காரர்...

மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவுக்கு நேற்று பாராளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தி உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காலிமுகத்திடல் போராட்டத்தை அமைதியானதாகக் கருத முடியாது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கைகளில் இரத்தம் இருக்கிறது என்றும் அவர் சாடினார். மேலும், போராட்டம் தொடர்பில் அமரகீர்த்தி அத்துக்கோரள எந்தத் தவறும் செய்யவில்லை என்று அவர் கூறினார்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது கடந்த மே 9ஆம் திகதி அரசாங்க தரப்பு ஆதரவாளர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து நாடு முழுவதும் பல இடங்களில் வன்முறைகள் பரவின. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அத்துக்கோரள நிட்டம்புவ பகுதியில் வைத்து கும்பல் ஒன்றினால் அடித்துக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# விற்பனை நிலையமொன்றின் களஞ்சியசாலை சுற்றிவளைப்பு

## பதுக்கி வைக்கப்பட்ட அரிசி மீட்பு



மட்டக்களப்பு, ஜூன் 11

மட்டக்களப்பு காத்தான்குடி அமானுல்லாஹ் வீதியில், அரசி மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல சரக்கு விற்பணை நிலையமொன்றின் களஞ்சியசாலையை நேற்று வெள்ளிக்கிழமை காலை நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் சுற்றிவளைத்தனர்.

அந்த களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை அரிசி மூடைகளை மீட்டதுடன், அரசின் கட்டுப்பாட்டு விலைக்கு பொது மக்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் மட்டக்களப்பு அதிகாரிகளுக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரனின் வழ்காட்டலிலும், ஆலோசனையின் பேரிலும், நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் அன்வர்சதாத் தலைமையில், அங்கு சென்ற அதிகாரிகள் குழு காத்தான்குடி அமானுல்லாஹ் வீதியில், அரசி மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல சரக்கு விற்பணை நிலையமொன்றின் களஞ்சியசாலையை முற்றுகையிட்டது.

அங்கிருந்த அரிசி மூடைகளை மீட்டு, அவ்விடத்திலேயே குறித்த அரிசி மூடை அனைத்தையும் அரசின் கட்டுப்பாட்டு விலைக்கு மக்களுக்கு விற்பனை செய்யுமாறு உத்தரவையிட்டதையடுத்து, குறித்த அரிசியினை வைத்திருந்த கடை உரிமையாளர் கட்டுப் பாட்டு விலைக்கு அரிசியை விற்பனை செய்தார்.

குறித்த பல சரக்கு விற்பனை நிலைய உரிமையாளருக்கு எதிராக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் மட்டக்களப்பு அலுவலக அதிகாரிகளினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரிசிக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் வியாபாரிகள் சிலர் அரிசியினை பதுக்கி வைத்திருப்பதாக முறைப்பாடுகள் கிடைக்கெப் பெற்றுள்ளன.

தொடர்ச்சியாக நாங்கள் இவ்வாறான பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களை சோதனை செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் அன்வர் சதாத் தெரிவித்தார். (அ)

# பொறுப்புள்ள அதிகாரிகள் அரசியல் செய்யக்கூடாது!

## மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன். 11

பொறுப்பு மிக்க அதிகாரிகள் அரசியல் செய்வதை தவிர்க்க வேண்டும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் கருத்து தெரிவித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தர, திறை சேரியின் முன்னாள் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிக்கல, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட நாணய சபையின் முன்னாள் பிரதிநிதிகள், மத்திய வங்கி யின் தற்போதைய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் இந்தக் குழுவின் கூட்டத்துக்கு அழைக்கப் பட்டிருந்தனர்.

2019ஆம் ஆண்டு இறுதியில் புதிய அரசாங்கத்தினால் வரி கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தியமை காரணமாக 500 பில்லியன் ரூபா அளவில் நாட்டுக்கு இல்லாமல் போனதாக கூறப்படுவது நியாயமானல்ல என முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கல இதன் போது தெரிவித்தார்.

வாகன இறக்குமதித் தடை உள்ளிட்ட விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடு கள் காரணமாக ஏற்பட்ட நட்டம் மற்றும் கோவிட் நிலைமை என்பன அதில் தாக்கம் செலுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி முன்னாள் பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது அமைச் சரவைப் பத்திரத்துக்கு அமைய, வரிக் கொள்கை தொடர்பில் இவ்வாறு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட மத்திய வங்கி ஆளுநர்-

அரசாங்கத்தின் பொறுப்பு மிக்க அதிகாரிகள் அரசியல் செய்வதை தவிர்க்கவேண்டும். அரசியல்வாதிக்கும், அதிகாரிகளுக் கும் இடையிலான வித்தியாசத்தை அவர்கள் உரியவாறு புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் சரியானதாக அல்லாத சந்தர்ப்பத்தில், அது தொடர்பில் எடுத்துக்கூறவேண்டியது அதிகாரிகளின் பொறுப்பும் கடமையுமாகும். அவ்வாறான தீர்மானங்களின் விளைவுகளுக்கு அரசியல்வாதிகள் மாத்திரம் பொறுப்பல்ல-என்றார். (அ)

# மாணவர்கள் போராட்டம்; கண்ணீர் புகை பிரயோகம்!

கொழும்பு, ஜூன் 11

கல்வி அமைச்சுக்குள் அத்துமீறி நுழைய முயன்ற பல்கலைக்கழக மாணவர்கள் மீது கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பத்தரமுல்ல பெலவத்தையில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாக பல்கலைக்கழக மாணவர் சம்மேளன உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

இந்நிலையில், அவர்கள் கல்வி அமைச்சுக்குள் புகுவதற்கு முயன்றனர். இதையடுத்து, குறித்த ஆர்ப்பாட்டத்தை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொண்டனர். (ஐ)






# தென்னை மரங்களை நாசமாக்கிய யானைகள்

மட்டக்களப்பு, ஜூன் 11

வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் புணாணை கிழக்கு கிராம அதிகாரி பிரிவிலுள்ள, கேணிமடு பகுதியில் காட்டு யானைகள் புகுந்து பெறுமதியான தென்னை மரங்களை சேதப்படுத்தியுள்ளன.

கேணிமடுப் பகுதியில் தோட்டம் வைத்து பராமரித்து வரும் சி.முகம்மட் சாலி (வயது 64) என்பவரது தோட்டத்திலுள்ள 53 தென்னை மரங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதுடன், காய்த்த தென்னை மரங்கள் மற்றும் காய்க்கும் தறுவாயில் உள்ள தென்னை மரங்கள், வளர்ந்து வரும் தென்னை மரங்கள் என்பவற்றைப் பகுதியளவிலும், முற்றாகவும் யானைகள் சேதமாக்கியுள்ளதாக பாதிக்கப்பட்ட சி.முகம்மட் சாலி தெரிவித்தார்.

சுற்றுவேலியை சேதமாக்கி இரவு வேளையில் யானைகள் வந்து தென்னைகளை சேதப்படுத்தியுள்ளன. யானைகள் தொடர்ச்சியாக வருகை தருவதால் உயிர் அச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதுடன், பாரிய நஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளேன்.

இப்பிரதேசத்திற்குள் நுழையும் காட்டு யானைகளை கட்டுப்படுத்த நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால், தொடர்ச்சியாக இவ்வாறான அழிவுகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

யானை வேலி அமைத்துள்ள நிலையிலும் வீதியில் அமைக்கப்பட்ட வேலியை பகல் வேளையில் அகற்றினால் இரவு வேளைகளில் உரியவர்கள் மீள பொருத்தாமையினால், அதனூடக யானைகள் வருகின்றன.

எனவே இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நிரந்தரத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், யானை வேலியை முறையாக பராமரித்து எங்களது உயிர்களையும், பயிர்களையும் பாதுகாக்க உதவ வேண்டும்- என்றார் அவர். (அ)

# 55 மில்லியன் டொலர் கடன் பெறும் ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஜூன் 11

யூரியா இறக்குமதி செய்வதற்காக இந்திய எக்ஸிம் வங்கியிடமிருந்து அமெரிக்க டொலரை கடனாக பெறுவதற்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாதிடப்பட்டது.

65,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்வதற்கு இந்திய அரசாங்கத்திடம் இந்த கடன் வசதி கோரப்பட்டுள்ளது.

சிறுபோகப் பருவத்தில் யூரியா உரத்துக்கான உடனடி தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு இந்த கடனுதவி கோரப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக, யூரியா உரம் கொள்வனவு செய்வதற்கு 55 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவியாக வழங்க இந்திய அரசு இணக்கம் தெரிவித்தது. உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தலைமையில் இடம்பெற்றது. (அ)

# 2 கோடி ரூபா அப்பிள்களை தூக்கி எறிந்த உரிமையாளர்!

## வரி அதிகரிப்பே காரணம்

கொழும்பு, ஜூன் 11

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு தற்போது, துறைமுகத்தில் தேங்கியுள்ள சுமார் 24,000 கிலோகிராம் அப்பிள் தொகையை தெஹிவளை மிருகக் காட்சிசாலைக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சமீபத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி அதிகரிப்பு காரணமாக அந்த அப்பிள் தொகையை பெற்றுக்கொள்வதற்கு அதன் உரிமையாளர் மறுத்துவிட்டார். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- கந்தா கடம்பா கதிர்வேலா
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்




05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை-பஞ்சத்தை தவிர்ப்பது எப்படி?




**இரவு**
07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: டான் பட்டிமன்றம்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு